பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 82

ஞாயிற்றுக்கிழமை
16 பெப்ரவரி 2025

மாசி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



பொலிஸாரை கண்காணிக்க புதிய திட்டம்! 07

உள்ளூராட்சி சட்டவரைவில் நாளையதினம் வாக்கெடுப்பு? 14

பிரபாகரனின் ஒளிப்படத்தைப் பயன்படுத்தத் தடைவிதிக்குக 02


# செம்மணியில் மீட்கப்பட்ட எச்சங்கள் இன்னுமொரு மனிதப் புதைகுழியா?

## தீவிரமாக ஆராயப்படவேண்டும் என கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து



யாழ்ப்பாணம், பெப்ரவரி 16

யாழ்ப்பாணம் - செம்மணியில் மண்டையோடு உட்பட மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதி மனிதப் புதைகுழியாக இருக்க வாய்ப்புள்ளதாகச் சந்தேகிக்கப்படும் நிலையில், அது தொடர்பில் தீவிரமாக ஆராயப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

14



## இளங்குமரன் எம்.பி. விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், பெப். 16

தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் பயணித்த கார் விபத்தில் சிக்கியதில் அவர் தலையில் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

14

## பாடசாலைக் கல்விமுறை இலங்கையில் படுதோல்வி

### மேலதிக வகுப்புக்கு காரணம் அதுவே பிரதமர் ஹரிணி ஒப்புதல்

யாழ்ப்பாணம், பெப். 16

இன்று நாடளாவிய ரீதியில் மேலதிக வகுப்புகளை மையப்படுத்திய கற்றல் முறை தோன்றுகின்றமைக்குப்

14

## பாடசாலைகளுக்குள் அரசியல்வாதிகள்!

### பிரதமர் ஹரிணியின் கருத்து அவர் முன்பாகவே காற்றில்!

யாழ்ப்பாணம், பெப். 16

பாடசாலைக்குள் அரசியல்வாதிகள் செல்லக்கூடாது. அங்கு அரசியலுக்கு இடமில்லை என்று கூறிவரும் பிரதமர் ஹரிணி, தனது கருத்துகளைத் தானே மீறும் வகையில் நடந்துகொண்டுள்ளார்.

14



## அனைத்து இன மக்களினதும் சுயகௌரவம் பாதுகாக்கப்படும்

### பிரதமர் ஹரிணி யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

இலங்கையின் விசேட அம்சமே இனப்பல்வகைமைதான். ஆதலால், அனைத்து இன மக்களின் உரிமைகளும், கௌரவங்களும் பாதுகாக்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகளை நாம் முன்னெடுப்போம் என்று பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்திருந்த பிரதமர் ஹரிணி வழக்கம்பரையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில்

14

### பிரதமரின் வருகை

## யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

பிரதமர் ஹரிணி அமரசூரியவின் வருகையால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிரதமர் ஹரிணி யாழ்ப்பாணத்தில் கலந்துகொண்ட நிகழ்வுகளிலும், நிகழ்வுகள் இடம்பெற்ற

14




'ரியூசன் விசயத்தையே இப்பதான் கண்டுபிடிச்சிருக்கினம் எண்டால் பாருங்கோவன்'

## இலங்கையின் வரலாற்றில் பலவீனமான அரசாங்கம்!

### தேசிய மக்கள் சக்தி மீது சஜித் நேற்றுக் கடும் தாக்கு

கொழும்பு, பெப். 16

சுதந்திர இலங்கையின் வரலாற்றின் தோன்றிய மிகவும் பலவீனமான அரசாங்கம் என்றால் அது தேசிய மக்கள் சக்திதான் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விமர்சித்துள்ளார்.

14

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 15.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3990 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 05 10 57 76 |
| விசேட எழுத்து | Q |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 15.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1057 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 21 30 33 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 15.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 016 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 2 4 4 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 15.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2096 |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கங்கள் | 26 28 40 70 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 15.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5748 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 3 9 0 0 0 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 15.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1778 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 05 07 38 75 |
| விசேட எழுத்து | M |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 15.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 323 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 0 0 0 5 |

# கோத்தாபய ஆட்சிக் கவிழ்ப்புக்கு யு.எஸ்.எய்ட் நிறுவனத்தால் நிதி

## அரசாங்கம் ஆராய்வு

**கொழும்பு, பெப். 16**

**இலங்கையில் ஆட்சிமாற்றம் ஒன்றை ஏற்படுத்த யு. எஸ். எய்ட் நிறுவனத்தினால் நிதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற சர்ச்சை தொடர்பில் தேசிய அரச சார்பற்ற நிறுவன செயலகத்திடம், அரசாங்கம் அறிக்கை கோரியுள்ளதுடன் இதுதொடர்பான குற்றச்சாட்டுகளை முழுமையாகக் கையாள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பல ஆண்டுகளாக, அமெரிக்கா ஆண்டுதோறும் சுமார் 40 பில்லியன் டொலரை வெளிநாட்டு உதவிகளுக்கு செலவிடுகிறது.

2023 ஆம் ஆண்டில் இலங்கையின் உர நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்காக அமெரிக்க அரசாங்கம் யு. எஸ். எய்ட் நிறுவனத்தின் மூலம் 46 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியது.

பொருளாதார நெருக்கடியின் போது அது மனிதாபிமான உதவிகளையும் வழங்கியது. இருப்பினும், ஓரினச் சேர்க்கையாளர்களின் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை பதவியில் இருந்து விரட்டியடித்தல் போன்ற சர்ச்சைக்குரிய திட்டங்களுக்காகவும், யு. எஸ். எய்ட் நிதிகள் பயன்படுத்தப்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன . இவை குறித்து முழுமையாக ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | 15.02.2025 | தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0456 | | |
| ஆங்கில எழுத்து | D | வெற்றி இலக்கம் | 0 3 7 0 1 9 |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | 15.02.2025 | தினம் | சனிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2722 | ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 02 30 40 57 | | |

| சனிதா | | | |
|---|---|---|---|
| திகதி | 15.02.2025 | தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | N | வெற்றி இலக்கம் | 07 29 30 65 |
| வெற்றி வாரம் | 4883 | | |

| SASIRI | | | |
|---|---|---|---|
| திகதி | 15.02.2025 | தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0623 | வெற்றி இலக்கம் | 10 18 43 |

| லக்ன ராசி | | | |
|---|---|---|---|
| திகதி | 15.02.2025 | தினம் | சனிக்கிழமை |
| மேடம் | ♈ | வெற்றி இலக்கம் | 05 24 39 55 |
| சீட்டிழுப்பு வாரம் | 4434 | | |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | 15.02.2025 | தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | W | சுப்பர் இலக்கம் | 13 |
| வெற்றி இலக்கம் | 22 28 41 64 | வெற்றி வாரம் | 1898 |

| அத கோடிபதி | | | |
|---|---|---|---|
| திகதி | 15.02.2025 | தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | B | வெற்றி இலக்கம் | 10 16 30 69 |
| வெற்றி வாரம் | 2548 | | |

# பிரபாகரனின் புகைப்படத்தை பயன்படுத்துவதை தடைசெய்க

## சீமானுக்கு எதிராக மனு

யாழ்ப்பாணம், பெப். 16

புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை பொது வெளியில் பயன்படுத்த சீமானுக்கு தடைவிதிக்கக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் எல்.கே சார்லஸ் அலெக்சாண்டர் என்பவரால் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கும் இலங்கை அரசுக்கும் இடையே 2009ஆம் ஆண்டு போர் நடைபெற்றபோது, புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை போர்முனையில் நேரில் சந்தித்தேன் என்றும் அந்தச் சந்திப்புக்கு பின் ஏ.கே 47 ரக துப்பாக்கியில் போர்ப் பயிற்சி எடுத்தேன் எனவும் சீமான் தமிழ்நாட்டில் பரப்புரை செய்துவருகிறார். எனவே தடைசெய்யப்பட்ட அமைப்பின் தலைவர் பிரபாகரன் படத்தைப் பயன்படுத்த சீமானுக்கு தடைவிதிக்கவேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## இம்மாதத்தில்

# ஓமான், இந்தியா செல்கிறார் ரணில்

கொழும்பு, பெப். 16

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மாத இறுதிக்குள் இருவெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளார்.

இதில் அவரது முதல் வெளிநாட்டுப் பயணமாக நேற்று மாலை ஓமான் சென்றுள்ளார்.

ஓமானில் நடைபெறும் பொருளாதார மாநாடொன்றில் சிறப்புரையாற்றுவதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் புதன்கிழமை மீண்டும் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பவுள்ளதுடன், அதன்பின்னர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# அதானியின் திட்டங்கள் மீண்டும் பேச்சுகள்?

கொழும்பு, பெப். 16

அதானி நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க மீள்சக்தித் திட்டம் தொடர்பாக அடுத்த வாரம் அதானி நிறுவனமும் இலங்கை அரசாங்கமும் மூடிய அறைக்குள் பேச்சு நடத்தவுள்ளதாக ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இரு பகுதியினரும் ஒரு புரிந்துணர்வுக்கு வருவார்கள் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதானி நிறுவனம் தமது ஒப்பந்தத்திலிருந்து முற்றாக விலகவில்லை என முதலீட்டுச்சபை தெரிவித்துள்ளது.

அதேவேளை அதானி நிறுவனம் இலங்கையிலிருந்து வெளியேறப்போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து அதானியின் வெளியேற்றம் அந்நிய முதலீடுகளிலும், டொலர் இருப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)

# எதிர்க்கட்சிகளை நெருக்கடிக்குள்ளாக்கி தேர்தலை நடத்துவதற்கு அரசு முயற்சி

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கடந்த காலங்களில் கால வரையறையின்றித் தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டமைக்கு எதிராக நாமே குரல் கொடுத்தோம். ஆனால் தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சிகளை நெருக்கடிக்குள்ளாக்கி அவசரமாக தேர்தலை நடத்த முற்படுகிறது. இவ்வாறு இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலுக்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். ஆயினும் அதைவிட சாதாரணதரப் பரீட்சைக்கு முன்னுரிமையளிக்க வேண்டும். அந்தச் சந்தர்ப்பத்தில் பரப்புரைகளை முன்னெடுப்பது பொருத்தமானதாக இருக்காது. எமக்குள்ள மற்றொரு பிரதான பிரச்சினை நிதியாகும். ஏனைய கட்சிகளைப் போன்று எமது கட்சிகள் செல்வந்தக் கட்சிகளும் அல்ல. அதனால் புத்தாண்டின் பின்னர் தேர்தல் நடத்தப்பட்டால் பொருத்தமானதாக இருக்கும் என்றே கூறுகின்றோம்.

ஐக்கிய தேசிய கட்சியுடனான பேச்சுக்கும் இந்த தீர்மானத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அது நீண்டகால செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளி. தெரேசா பெண்கள் கல்லூரி திட்டமிட்டு மழுங்கடிக்கப்படுகிறதா?

*பெற்றோர் ஆதங்கம்*

**கிளிநொச்சி, பெப்.16**

**கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற ஒரேயொரு பெண்கள் பாடசாலையான கிளிநொச்சி தெரேசா பெண்கள் கல்லூரியில் ஆசிரிய வளப்பற்றாக் குறை நிலவுகின்றது. இதனை நிவர்த்திசெய்வதில் அதிகாரிகள் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர் என்று பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலையின் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பிரிவுக்கான பொருளியல், பௌதீகவியல், பொருளியல், உயிரியல் ஆகிய பாடங்களுக்கு இதுவரை ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

ஆசிரியர் ஒருவர் அண்மையில் காலமானபோதிலும் அந்த வெற்றிடமும் இன்னமும் மீள்நிரப்பப்படவில்லை. உயிரியல் பிரிவில் 'பயோஸ்ட்ரீம்' இல் கல்விகற்கும் மாணவர்கள் உயிரியல் மற்றும் பௌதீகவியல் ஆசிரியர் இன்மையினால் தனியாக இரசாயனவியல் பாடத்துக்கு மாத்திரமே பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சில மாணவர்களின் வரவுநிலை பாதிப்படைகின்றது. வர்த்தகத்துறை மற்றும் கலைத்துறை மாணவர்களின் தெரிவு பாடங்களில் பிரதான ஒன்றான பொருளியல் பாடத்துக்கும் ஆசிரியரும் நியமிக்கப்படவில்லை. இதுதொடர்பாக பாடசாலை பெற்றோர் சங்கத்தால் வலயக் கல்வி அலுவலகத்துடன் கலந்துரையாடியபோதிலும் உரிய பதில் வழங்கப்படவில்லை.

எனவே மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆசிரிய நியமனங்களை உடன் வழங்கவேண்டும்- என்றனர்.

(ச-125)

# மாமடு வீதிக்கு தீர்வில்லையா?

*மக்கள் விசனம்*

வவுனியா, பெப். 16

வவுனியா, போகஸ்வெவ மாமடு வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனால் வீதியால் பயணிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட போகஸ்வெவ கிராமத்துக்குச் செல்கின்ற பிரதான வீதியில், மாமடுவிலிருந்து போகஸ்வெவ வரையிலான சுமார் 15 கிலோ மீற்றர் நீளமான வீதி குண்டும் குழிகளிலும் நிறைந்து நீண்டகாலமாக சீரமைப்பின்றிக் காணப்படுகின்றது. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்துவோர் பெரும் நெருக்கடியின் மத்தியிலேயே பயணிக்க வேண்டியுள்ளது. அத்துடன் அம்புலன்ஸில் கூட நோயாளர்களை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே இந்த வீதியைப் புனரமைக்க அதிகாரிகளும், அரசாங்கமும் கவனம் செலுத்தவேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25, 18)

# கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியை இடமாற்றாதீர்

*பதாகைகள் காட்சி*

யாழ்ப்பாணம், பெப். 16

கோப்பாய்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய வெதகெதரவை இடமாற்றம் செய்ய வேண்டாமெனக் கோரிக் கோப்பாய்ப் பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

"மாற்றாதே! மாற்றாதே! இரண்டு மொழிகளும் தெரிந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை மாற்றாதே!" எனும் வாசகம் அடங்கிய பதாகைகளே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 3 வருடங்களாக கோப்பாய்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிவந்த குறித்த பொலிஸ் அதிகாரி நாடாளாவிய ரீதியில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தில் பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,66,20)

# இயந்திர அறுவடை கட்டணத்தில் மாறுபாடு

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். குடாநாட்டில் நெல் அறுவடை செய்யும் இயந்திரங்களுக்கான கட்டணம் ஒவ்வொரு இடங்களுக்கும் மாறுபட்ட வகையில் அறவிடப்படுகின்றது என்று நெற்செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போது பெரும்பாலான வயல்களில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் இயந்திர அறுவடையின்போது பரப்புக்கு 800 ரூபா முதல் 1000 ரூபா வரையில் கட்டணமாகப் பெறப்படுகின்றது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-25, 17)





# ஆரியகுளத்தில் 'கற்பகம்' திறப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் மற்றும் பனை அபிவிருத்திச்சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் 'கற்பகம்' பனை சார் மற்றும் உள்ளூர் உற்பத்திகளின் விற்பனை நிலையம் யாழ். ஆரியகுளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி. சகாதேவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக பெருந்தோட்டப் பிரதிஅமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் பங்கேற்றார்.

அத்துடன் கைத்தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி வனஜா, பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர், வட மாகாண கைத்தொழில் திணைக்கள உதவிச் செயலாளர், பனை அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர். (ச-25-17)

# எகிறும் தேங்காய் விலை அந்தரிக்கும் நுகர்வோர்

யாழ்ப்பாணம், பெப்.16




தேங்காயின் விலை என்றும் இல்லாதவாறு நாளுக்கு நாள் அதிகரித்துச்செல்வதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருமனுக்கு ஏற்றவாறு மாறுபட்ட விலைகளில் சந்தைகளில் தேங்காய் விற்பனை செய்யப்படுகின்றது.

தேங்காய் ஒன்று 180ரூபா தொடக்கம் 250ரூபா வரைக்கும் விற்கப்படுவதால் நுகர்வோர் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

அதேவேளை இந்தத் தேங்காய் விலை அதிகரிப்பைப் பயன்படுத்தி சிலர் தென்னையிலிருந்து தேங்காய்களை ஒருபதத்தில் பறித்து அவற்றை வெயிலில் காயவைத்து விற்பனை செய்துவருகின்றனரெனவும் நுகர்வோர் குற்றஞ்சுமத்தியுள்ளனர். (ச-41-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## LOLC பைனான்ஸ் MSME தனிநபர் நிதி வாடிக்கையாளர்களுக்கு நிலையான வளர்ச்சியை மேம்படுத்துகிறது

LOLC பைனான்ஸ் தனது MSME தனிநபர் நிதி வாடிக்கையாளர்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மாற்றியமைக்கும் பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துகிறது. அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கைச் சமூகங்களை வலுவூட்டுவதற்கான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் கூறுகிறது. 2009 இல் தனிநபர் நிதிக்கடன்கள் அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, பாரம்பரிய வங்கிச் சேவைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணுகலைக் கொண்ட குழுக்களுக்கான இடைவெளியைக் குறைப்பதில் LOLC பினான்ஸ் கவனம் செலுத்துகிறது. விவசாயம், வர்த்தகம் மற்றும் சிறிய அளவிலான உற்பத்தி போன்ற வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக வடிவமைக்கப்பட்ட சிறிய கடன்களை வழங்குவதன் மூலம், LOLC பைனான்ஸ் தன்னம்பிக்கை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான ஊக்கியாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. நீண்டகால வெற்றிக்கு நிதி உதவி மட்டும் போதுமானதாக இல்லை என்பதை உணர்ந்து, LOLC பைனான்ஸ் தனது சேவைகளில் திறன் மேம்பாடு மற்றும் வருமானத்தை உருவாக்கும் பயிற்சியை ஒருங்கிணைத்து ஒரு துணிச்சலான முன்னோக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்தப் பயிற்சித் திட்டங்கள், MSME தனிநபர் நிதி வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கடன்களின் பயன்பாட்டை அதிகப்படுத்தவும், நீண்ட கால நிதி நிலைத்தன்மையை அடையவும் தேவையான அறிவு மற்றும் திறன்களை அவர்களுக்கு அளிக்கும் வகையில் மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. பதிவு செய்தல் மற்றும் சரக்கு மேலாண்மை போன்ற அடிப்படை வணிக நடைமுறைகளில் தேர்ச்சி பெறுவது முதல் காளான் வளர்ப்பு, இயற்கை வேளாண்மை மற்றும் தென்னை நார் தயாரிப்பு உற்பத்திகள் போன்ற துறைகளில் சிறப்புத் திறன்களைப் பெறுவது வரை, பங்கேற்பாளர்களுக்கு அவர்களின் வருமான திறன் மற்றும் தொழில் முனைவோர் புத்திசாலித்தனத்தை மேம்படுத்துவதற்கான கருவிகள் வழங்கப்படுகின்றன. இந்த முன்முயற்சி நிதிக் கல்வியறிவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது பங்கேற்பாளர்களுக்கு பட்ஜெட், சேமிப்பு மற்றும் பணப்புழக்கத்தை நிர்வகித்தல் ஆகியவற்றின் அடிப்படைகளைக் கற்பித்தல், கடனை முடங்குவதைத் தவிர்ப்பதற்கும் நிதி நிச்சயமற்ற நிலைக்குச் செல்வதற்கும் உத்திகள் ஆகியவை அடங்கும். இந்த விரிவான அணுகுமுறை வாடிக்கையாளர்கள் வருமானத்தை ஈட்டுவது மட்டுமல்லாமல், அவர்களின் நிதிகளை விவேகத்துடன் நிர்வகிப்பதையும் உறுதிசெய்கிறது.

ஒரு தனித்துவமான பயிற்சித் திட்டம் தோட்டக்கலையில் கவனம்செலுத்துகிறது. இது உணவுப் பாதுகாப்பு, நிலையான வாழ்க்கை மற்றும் துணை வருமானத்தை மேம்படுத்துவதற்கான சக்திவாய்ந்த கருவியாகும், அதேநேரத்தில் வள திறமையான முறைகளைச் செயற்படுத்துவதன் மூலம் செலவைக் குறைக்கிறது. பங்கேற்பாளர்கள் தளத் தேர்வு, தோட்ட வடிவமைப்பு, மண் தயாரித்தல், புச்சி மேலாண்மை மற்றும் தங்கள் விளைபொருட்களுக்கு மதிப்புக் கூட்டல் போன்ற அத்தியாவசிய திறன்களைக் கற்றுக்கொள்கிறார்கள். செங்குத்து தோட்டக்கலை மற்றும் கரிம பூச்சிக் கட்டுப்பாடு போன்ற நுட்பங்கள் மூலம், வாடிக்கையாளர்கள் சிறிய இடங்களை ஊட்டச்சத்து மற்றும் வருமானத்தின் செழிப்பான ஆதாரங்களாக மாற்றும் அதிகாரம் பெற்றுள்ளனர். உரம் தயாரித்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு போன்ற சுழல் நட்பு நடைமுறைகளையும் இந்தப் பயிற்சி வலியுறுத்துகிறது.

சலவைத்தூள் மற்றும் சவர்க்காரம் தயாரிப்பது எங்களின் மிகவும் கோரப்பட்ட பயிற்சியாகும். பல்வேறு வகையான சலவைத்தூள் மற்றும் சவர்க்காரம், பல்வேறு சலவைத்தூள் மற்றும் சவர்க்காரங்களின் அடிப்படை வேதியியல், பொருள் ஆதாரம், உபகரணங்கள் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் மற்றும் இறுதித் தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றைப் பற்றிய தத்துவார்த்த மற்றும் நடைமுறை அறிவை வழங்குவதன் மூலம் சலவைத்தூள் மற்றும் சவர்க்காரம் செய்யும் சிறு அளவிலான வணிகத்தைத் தொடங்க அல்லது மேம்படுத்துவதற்கான அறிவு மற்றும் திறன்களை வாடிக்கையாளர்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கிறது.

LOLC பைனான்ஸ் பிஎல்சியின் மற்றும் தனிப்பட்ட நிதியின் தலைவர் திரு.சரித் ஜாகொட கருத்துத் தெரிவிக்கையில், LOLC பைனான்ஸ் இன் நிலைத்தன்மை இலக்குகளுடன் இணங்கி, இந்த பயிற்சித் திட்டங்கள் தனிநபர்கள், குறிப்பாக சமூகங்களில் உள்ள பெண்களுக்கு அவர்களின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமையைக் குறைக்கும்போது குறைந்த வருமானம் மற்றும் கலாசாரத்தை மேம்படுத்துவதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றன. தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள். அதிகரித்த வருமானம் மற்றும் பணப்புழக்கம் தனிநபர்கள் அல்லது குடும்பங்கள் கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்வு போன்ற அவர்களின் சமூக நலனை மேம்படுத்த உதவும். மேலும், தேவையான மூலதனத்திற்கான பரவலான அணுகல் மற்றும் பயிற்சிகள் மற்றும் பிற அம்சங்களின் மூலம் வணிகத்திற்கான ஆதரவு ஆகியவை ஏற்கனவே உள்ள வணிகங்களின் செயற்திறனை மேம்படுத்துவதோடு, புதிய தொழில்கள் தோன்றுவதற்கும், வேலை உருவாக்கத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதற்கும் ஊக்கமளிக்கும். குறிப்பாக, பயனாளிகளின் அடித்தளத்தில் கணிசமான பகுதியை உருவாக்கும் பெண்கள், அறிவையும் வணிக அறிவையும் பெறுவது மட்டுமல்லாமல், பெண்களின் உரிமைகளை மீறும் கலாசார விதிமுறைகளுக்கு எதிராக நிற்கும் நம்பிக்கையையும் திறனையும் பெறுவார்கள், நிதிச் சுதந்திரம் மற்றும் தன்னம்பிக்கையைப் பெறுவார்கள், சமூகத் தலைமையின் தூண்களாக மாறி சமூக சமத்துவத்தைப் பெறுவார்கள். வாடிக்கையாளர்களின் வர்த்தகம் மற்றும் வருமானத்தை மேம்படுத்தும் திறனை மேம்படுத்துவதன் மூலம், LOLC பைனான்ஸ் தனது வாடிக்கையாளர்களுடனான உறவை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், பகிரப்பட்ட மதிப்பை உருவாக்க உறுதிபூண்டுள்ள சமூகப் பொறுப்புள்ள நிறுவனமாக அதன் நற்பெயரையும் வலுப்படுத்துகிறது.






முல்லைத்தீவு முன்பள்ளி ஆசிரியர்களின் நிர்வாகத்தினருக்கும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்குமிடையிலான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. சந்திப்பில் குறைந்த ஊதியத்துடன் பணியாற்றிவரும் முன்பள்ளி ஆசிரியர்களின் நிரந்தர நியமனம், சம்பள அதிகரிப்பு என்பன தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. (ச-25, 246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூழல் பிரச்சினை முறையிடலாம்!

கொழும்பு, பெப். 16

நாட்டில் இடம்பெறும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பில் முறையிடுவதற்குப் புதிய வட்ஸ்அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக பொதுமக்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் இந்த வட்ஸ்அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, சுற்றுச்சூழல் பிரச்சினைகளை 076 6412029 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு குறுஞ்செய்திகளாக அனுப்பலாம்.

பொதுமக்களால் முன்வைக்கப்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்து, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுற்றுச்சூழல் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், பெப். 16

நல்லூர் ஈழத்துச் சீரடி சாய் மந்திரி ஆலய நிர்வாகம் ஏற்பாடு செய்து நடத்தும் வருடாந்தக் குருதிக் கொடை முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை08.30 மணி முதல் பிற்பகல்01 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள ஈழத்துச் சீரடி சாய் மந்திரி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடை முகாமில் குருதிக் கொடையாளர்கள் பங்கேற்று குருதிக் கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

# முதியோர்களுக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப். 16

அஸ்வெசும குடும்பத்துக்குள் 70 வயதைப் பூர்த்திசெய்த முதியவர்களுக்கு வழங்கப்படும் 3,000 ரூபா மாதாந்த உதவித்தொகை அஸ்வெசும கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படும் என கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த மாதத்துக்கான உதவித் தொகை மற்றும் நிலுவையில் உள்ள கொடுப்பனவுகளை இம்மாதம் 20 ஆம் திகதி முதல் தபால் மற்றும் துணைத் தபால் நிலையங்கள் மூலம் செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## எமது உத்வேகமான சந்தைப்படுத்தல் அணியில் இணையுங்கள்!

சுன்னாகம் / யாழ்ப்பாணம் / கிளிநொச்சி / கொடிகாமம் / மன்னார் / நெல்லியடி / புதுக்குடியிருப்பு / திருகோணமலை / அம்பாறை / மட்டக்களப்பு / களவாஞ்சிகுடி / கல்முனை (அல்-ச:பா) / காத்தான்குடி (அல்-ச:பா) / மூதூர் / வவுனியா

எமது சுன்னாகம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொடிகாமம், மன்னார், நெல்லியடி, புதுக்குடியிருப்பு, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, களவாஞ்சிகுடி, கல்முனை (அல்-ச:பா), காத்தான்குடி (அல்-ச:பா), மூதூர், வவுனியா கிளைகளில் பணியாற்றுவதற்கு சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் சந்தைப்படுத்தல் அதிகாரிகள் தேவைப்படுகின்றனர்.

எமது பந்தளவு சொத்துகள் மற்றும் பொறுப்புகள்சார் தீர்வுகளை விநியோகிப்பதற்கு, உத்வேகமான மற்றும் சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் சந்தைப்படுத்தல் அதிகாரிகளை நாம் எதிர்பார்க்கின்றோம். எமது இலக்குகளை மற்றும் வாடிக்கையாளர் உறவுகளை மேம்படுத்தல் தொடர்பான முக்கியமான பணிகளை முன்னெடுப்பதற்காக எம்முடன் இணையுங்கள்.

மக்கள் வங்கியின் துணை நிறுவனமான பீப்பள்ஸ் லீசிங் அன்ட் ஃபைனான்ஸ் பிஎல்சி ஆனது, கொழும்பு பங்குச் சந்தையின் (சிஎஸ்இ) பிரதான வாரியத்தில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் முதன்மையான வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாகக் காணப்படுகிறது.

குளோபல் பினான்ஸ் சஞ்சிகையால் இலங்கையின் மிகவும் நம்பகரமான நிதி நிறுவனமாக அடையாளப்படுத்தப்பட்ட இந்நிறுவனமானது, ஆறு வருடங்களுக்குள் குத்தகைத் துறையில் சந்தைத் தலைமைத்துவத்தை அதி விரைவாகப் பெற்றதோடு மட்டுமல்லாது, ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இதனை நிலைநிறுத்தி வருகிறது.

நாடளாவிய ரீதியில் 100 இற்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட வலுவான வலையமைப்பை, தமது பெரும் பலமாகக் கொண்ட பீப்பள்ஸ் லீசிங் அன்ட் ஃபைனான்ஸ் பிஎல்சி ஆனது, பல்வேறுபட்ட தயாரிப்புகள் மற்றும் சேவைகள் மூலமாக பரந்த அளவிலான நிதித் தேவைகளைப் புர்த்தி செய்து, தனது வாடிக்கையாளர்களுடனான நல்லுறவைத் தொடர்ந்தும் பலப்படுத்தி வருகிறது.

### பிரதான பொறுப்புகள்:

**சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள்:**

தனிநபர் வாடிக்கையாளர்கள் மற்றும் கூட்டாண்மைகளுக்கு நிறுவனத்தின் சகல தீர்வுகளையும் ஊக்குவித்தல், உறுதியான உறவுகளை கட்டியெழுப்பி பேணுதல். தனிநபர் மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு விவரமான முன்மொழிவுகளை தயாரித்தல் வாடிக்கையாளர் சந்திப்புக்கள் மற்றும் பல்வேறு ஊக்குவிப்பு செயற்பாடுகளினூடாக சந்தை வாய்ப்புகளை இனங்காணல். வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய தீர்வுகள் வடிவமைப்பில் உதவுதல்.

**சந்தைப்படுத்தல் அதிகாரிகள்:**

வாடிக்கையாளர் உறவுகளை கட்டியெழுப்பி பேணுவதுடன், நிறுவனத்தின் தீர்வுகள் மற்றும் சேவைகளை ஊக்குவித்தல். வாடிக்கையாளர் விஜயங்கள் மற்றும் பல்வேறு ஊக்குவிப்பு செயற்பாடுகளினூடாக சந்தை வாய்ப்புகளை இனங்கண்டு அவற்றை கையகப்படுத்தல்.

### விண்ணப்பதாரியின் தகைமைகள்:

**சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள்**

- சந்தைப்படுத்தல் / வியாபார அபிவிருத்தி ஆதியவற்றில் ஆகக்குறைந்தது 05-06 வருடங்கள் பணியாற்றிய அனுபவம், குறிப்பாக லீசிங் அல்லது வங்கியியல் துறையில்.
- சந்தைப்படுத்தல் / முகாமைத்துவத்தில் தகைமையை கொண்டிருப்பது மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- சிறந்த தொடர்பாடல் திறன்கள்.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் / மோட்டார் சைக்கிள் செலுத்தும் அனுமதிப்பத்திரம்.

**சந்தைப்படுத்தல் அதிகாரிகள்**

- சந்தைப்படுத்தல் / வியாபார அபிவிருத்தி ஆகியவற்றில் ஆகக்குறைந்தது 01 வருடம் பணியாற்றிய அனுபவம், குறிப்பாக லீசிங் அல்லது வங்கியியல் துறையில்.
- சிறந்த தொடர்பாடல் திறன்கள்.
- கணித பாடத்தில் (C) சித்தி அடங்கலாக க.பொ.த. சா.தர பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
- பிரதான பாடங்களில் 3 எளிமையான சித்திகளுடன் க.பொ.த. உ. தர பரீட்சையில் சித்தி.
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் / மோட்டார் சைக்கிள் செலுத்தும் அனுமதிப்பத்திரம்.

எவ்வாறு விண்ணப்பிப்பது:
[illegible] careers@plc.lk [illegible]

PEOPLE'S LEASING
THE TRUSTED LEADER


# கல்வித்துறையில் வெற்றிடங்கள்

கொழும்பு பெப். 16

இலங்கையின் மேல், கிழக்கு மற்றும் வடக்கு ஆகிய மாகாணங்களின் மாகாண கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்குத் தற்போது, வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I இல் குறைந்தது ஐந்து ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டிருக்க வேண்டும். விண்ணப்பதாரர்களிடமிருந்து மார்ச் 3 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய முயற்சிகளில் சிறுசிறு தடைகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பாராத தனலாபம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பேச்சில் நிதானம் தேவை. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்னைகள் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**கடகம்:** தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். மாலையில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**கன்னி:** சகோதரர்களால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

**துலாம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளால் ஆதாயம் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன்வாங்கவும் நேரிடும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறு சலசலப்பு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். தாய்மாமன் வகையில் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

# பதிவாளர்களிடம் விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, பெப். 16

தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பிரதேச செயலகப் பிரிவில் பிறப்பு, இறப்பு பதிவாளர்கள் மற்றும் தென்மராட்சிப் பிரதேசத்துக்கான விவாகப்பதிவாளர் பதவிகளுக்குத் தகைமையுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 35 வயதுக்கும் 55 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவத்தினைப் பிரதேச செயலக மேலதிக பதிவுகாரர் அலகில் அல்லது யாழ்ப்பாணம் காணிப் பதிவகம் பணியகத்தில் பெற்று எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

# சிரமதானம்

சாவகச்சேரி, பெப். 16

தூய இலங்கை செயற்றிட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச கடற்கரையோரங்களைத் துப்புரவு செய்யும் செயற்பாடு எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது.

அன்றையதினம் அந்தந்தப் பிரிவு மக்களுடன் இணைந்து அனைவரும் துப்புரவுப் பணியில் ஈடுபடுமாறு பிரதேச செயலகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-25,9)

# பயிர் வளர்ப்போம் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், பெப். 16

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'பிடியளவு கமநிலத்துக்கு ஒன்றிணைவோம்' எனும் தொனிப்பொருளில் பயிரிடாது காணப்படும் சகல வயல் மேட்டு நிலங்களிலும் வினைத்திறனாகப் பயிரிடுதல் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம் கிளிநொச்சியில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தலைமையில் நடைபெற்ற நிழ்வில் திணைக்கள உத்தியோகத்தர்களால் பளை கமநல சேவை நிலையத்திலிருந்து இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. (ச-25, 113)



# பொருளாதார மையம் வத்திராயனில் திறப்பு

யாழ்ப்பாணம், பெப்.16

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் பொருளாதார அபிவிருத்தி மையக் கட்டடம் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

பொருளாதார நெருக்கடியால் பூர்த்தியடையாமல் காணப்பட்ட இந்தக் கட்டடம் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் நிதிப்பங்களிப்போடு பூர்த்திசெய்யப்பட்டு மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் வத்திராயன் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-27)





# உச்சந்தொடும் மரக்கறி விலை


கொழும்பு, பெப். 16

சந்தைகளில் மரக்கறிகளின் விலை பன்மடங்கு அதிகரித்துக் காணப்பட்டதாக நுகர்வோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கரட் 1,000 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

மேலும், ஒரு கிலோ பாகற்காய் 450 ரூபா முதல் 500 ரூபா வரையிலும், ஒரு கிலோ கத்தரிக்காய் 700 ரூபா வரையிலும் ஒரு கிலோ பீர்க்கங்காய் 250 ரூபா முதல் 300 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

யாழ்.சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் பக்திபூர்வமாக அண்மையில் இடம்பெற்றது. (ச-25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

நாம் அறிந்திருப்பதையும் அறிந்து கொள்ளாமல் இருப்பதையும் அறிந்து கொள்வதே உண்மையான அறிவு.

– டால்ஸ்டாய் –



# (ஏ)மாற்றங்களே விடை!

பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமர சூரிய யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். தனது பயணத்தின் ஒருபகுதியாக யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கும் அவர் சென்றிருந்தார். தமது அரசாங்கத்தின் கல்விக்கொள்கை தொடர்பான தெளிவூட்டலை அவர் மிகவும் கனகச்சிதமாக முன்வைத்திருக்கின்றார். ஒரு கல்வியமைச்சர் என்ற ரீதியில் அவரின் கருத்துக்கள் வரவேற்கப்பட வேண்டியவை. ஆனால், 'மாற்றம்' என்றுகூறி ஆட்சிக்குவந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏமாற்றங்களையே விடையாகத் தருகின்றமை பிரதமர் ஹரிணியின் விடயத்திலும் மெய்ப்பட்டிருக்கின்றது என்பதை மறுத்துரைக்கமுடியாது.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து மூன்றே மூன்று அமைச்சர்களை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டிருந்த இடைக்கால அரசாங்கத்திலும், அதற்குப் பின்னரும் 'பாடசாலைகளுக்குள் அரசியல்வாதிகள் செல்லக்கூடாது. அத்தகைய கலாசாரத்தை அனுமதிக்க முடியாது' என்று பிரதமர் ஹரிணி ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் கூறியிருந்தார். ஆனால், நேற்றைய நிகழ்வில் பிரதமர் ஹரிணியுடன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமைச்சரும், தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும்கூட கலந்துகொண்டனர். ஆக, எத்தகைய கலாசாரத்தை விமர்சித்தும், வேரறுக்கப்பட வேண்டியது என்று கூறியும் பிரதமர் ஹரிணி தரப்பினர் ஆட்சிக்கு வந்தனரோ, அத்தயை 'வெறுக்கப்படும் கலாசாரத்தை' இறுகப்பற்றிப் பிடிப்பவர்களாகத்தான் இவர்களும் உள்ளனர்.

இராணுவ முகாம்களை நீக்குவதில் உள்ள இழுத்தடிப்பு, காணிவிடுவிப்பில் உள்ள கள்ள மௌனம், அரசியற்கைதிகளின் விடுதலையில் உள்ள பாராமுகம், காணாமற்போனோர் விடயத்தில் உள்ள கபடத்தனம், திஸ்ஸ விகாரையின் விடயத்தில் வெளிப்படுத்தப்படும் நுண்ணிய அரசியல் என அனைத்திலும் கடந்த அரசாங்கங்களின் பாதையில் தான் தற்போதைய அரசாங்கம் பயணித்துக் கொண்டிருக்கின்றது. 'மாற்று முகங்கள்' ஆட்சிக்கு வந்ததால் ஏற்பட்ட கவனக்குவிவும், வந்த வேகத்தில் நடைமுறைப்படுத்திய ஓரிரு பாதை விடுவிப்புகளும் தேசிய மக்கள் சக்தியினருக்கு வெண்சாயம் பூசியிருக்கின்றதே அன்றி, இவர்கள் ஒன்றும் மீட்பின் தூதுவர்கள் அல்லர்.

உண்மையிலேயே முறைமை மாற்றத்தை இந்த அரசாங்கம் விரும்புகின்றது என்றால், புதியதொரு அரசியல் கலாசாரத்தை புகுத்துவதற்கு எத்தனிக்கின்றது என்றால், பிரதமரும், அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் யாழ்ப்பாணப் பாடசலைக்குள் எந்த அடிப்படையில் சென்றனர் என்ற தெளிவுபடுத்தலை வழங்கியே ஆகவேண்டும். 'கல்வி அமைச்சர் என்ற ரீதியில் பிரதமரின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியனதான்' என்று அர்த்தம்கொண்டாலும், அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கான விளக்கத்தையும் 'காரணத்தையும் 'பொறுப்பேற்றலையும் தேசிய மக்கள் சக்தியால் நிறைவேற்றமுடியுமா?

விமர்சன அரசியலுக்கும் செயற்பாட்டு அரசியலுக்குமான இடைவெளி இதுதான். எதிர்க்கட்சியில் இருக்கும்போது எவரும் விமர்சனங்களை முன்வைக்கலாம். ஆனால், அதிகாரம் கைக்குக் கிடைக்கும்பட்சத்தில் தன் விமர்சனத்துக்கு ஏற்ப வாழ்ந்துகாட்டுவதுதான் 'தூய அரசியல்'. 'தூய அரசியல்' மூலம் முதலில் தேசிய மக்கள் சக்தி தன்னைத்தானே சுத்தப்படுத்த வேண்டும். பின்னர் தூய இலங்கைத் திட்டத்தின் மூலம்நாட்டையும் தெருவையும்பற்றி யோசிக்கலாம்.

# பொலிஸாரின் செயற்பாடு கண்காணிக்க புதிய திட்டம்



கொழும்பு, பெப். 16

பொலிஸ் அதிகாரிகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கான புதிய திட்டமொன்றை, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல், துப்பாக்கிச்சூடு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுப்பது ஆகியவற்றை நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகளின் செயற்றிறனை மாதந்தோறும் பதில் பொலிஸ்மா அதிபர் மதிப்பாய்வு செய்வார். சமூகத்துடன் நேர்மறையான உறவுகளை உருவாக்குவதும் அமைதியைப் பேணுவதும் பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்பு . இந்தக் கடமைகளில் இருந்து தவறல் அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுடன் தொடர்புகளைக் கொண்டால், எந்தவொரு பொலிஸ் அதிகாரிக்கும் எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கஞ்சாச்செடி வளர்ப்பு ஆறு பேர் கைது

கொழும்பு, பெப். 16

யால சரணாலயப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்டிருந்த 2 இலட்சம் கஞ்சாச் செடிகள் அழிக்கப்பட்டதுடன் அதனை வளர்த்த குற்றச்சாட்டில் 4 சந்தேக நபர்கள் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை வேறொரு இடத்தில் 2 ஏக்கர் நிலப் பரப்பில் 3 இலட்சத்து 57ஆயிரம் கஞ்சாச் செடிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவையும் அழிக்கப்பட்டதுடன் அதனுடன் தொடர்புடைய குற்றச் சாட்டில் 2 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-25, 6)

## ஐ.தே.கட்சியின் புதிய உபதலைவராக நவீன் நியமனம்

கொழும்பு, பெப். 16

முன்னாள் விளையாட்டு, சுற்றுலா மற்றும் பெருந்தோட்டத் தொழில் அமைச்சரும், சப்ரகமுவ மாகாணத்தின் முன்னாள் ஆளுநருமான நவீன் திஸாநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவால் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் போதே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியான நவீன் திஸநாயக்க, முன்னைய அரசாங்க நிர்வாகங்களில் முக்கியமான அமைச்சர் பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## இலஞ்சம் பெற்ற பி.எச்.ஐ. கைது

கொழும்பு, பெப். 16

ஹோட்டல் உரிமத்தைப் புதுப்பிக்க இரண்டு இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்ற பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். கலேவெல பகுதியில் வைத்து அவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## அரசசார்பற்ற நிறுவனங்கள் கண்காணிக்க நடவடிக்கை


கொழும்பு, பெப். 16

அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் உண்ணிப்பாகக் கண்காணிக்கப்படும் எனப் பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம்தான் அரசசார்பற்ற நிறுவனங்கள் எதிர்காலத்தில் செயற்படமுடியும். புதிய அரசசார்ப்பற்ற நிறுவனம் ஒன்றும் இலங்கையில் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என்றால், அரசாங்கத்தின் வரையறைகளுக்கு உட்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# விவசாய இழப்பீடுகளை வழங்குவதில் பின்னடிப்பு

## கிளிநொச்சி கமக்கார அமைப்புகள் சுட்டிக்காட்டு

**கிளிநொச்சி, பெப். 16**

**கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு இயற்கை இடர்களால் ஏற்பட்ட நெற்செய்கை அழிவுகளுக்கு இழப்பீடுகளை வழங்குவதில் கமநல காப்புறுதிச்சபை ஈடுபாடு காட்டவில்லை என கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் சுப்பிரமணியம் யதீஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

கிளிநொச்சியில் நேற்று சனிக்கிழமை நடத்திய ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள், இழப்பீடுகளைப் பெறுவதற்கு கமநலக் காப்புறுதிச்சபை மூலம் விண்ணப்பித்திருந்தனர். பாதிப்படைந்த செய்கைகளை அவர்கள் முழுமையாகப் பார்வையிடாது அவை நோயால் பாதிக்கப்பட்டது.

இந்த அழிவுக்கான இழப்பீடுகளை வழங்க முடியாது என்று சுற்று நிருபம் குறிப்பிடுவதாக தெரிவிக்கின்றனர். எனவே விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பைச் சரி செய்வதற்கு கமநலக் காப்புறுதி சபை இழப்பீடுகளை வழ்ங்குவதுடன் நியாமான தீர்வையும் முன்வைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25,113)

# கிளிநொச்சியில் 'தூய இலங்கை' திட்டம்

கிளிநொச்சி, பெப். 16

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 'கிளீன் சிறிலங்கா' வேலைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ9 வீதியில் நீதிமன்றக் கட்டடம் தொடக்கம் கரடிபோக்குச் சந்தி வரை அமைக்கப்பட்டுள்ள பூச்சாடிகளை மீள்புனருத்தானம் செய்வதற்கான பணிகள் நேற்று இடம்பெற்றன.

குறித்த பணியில் இளைஞர், யுவதிகள் பங்கு கொண்டனர். (ச-25,113)



## வவுனியாவில்

# 'பிடியளவு கமநிலம்' திட்டம் ஆரம்பம்

கிளிநொச்சி, பெப். 16

நாடாளாவிய ரீதியில். 'பிடியளவு கமநிலத்துக்கு ஒன்றிணைவோம்' நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக் கப்பட்டு வரும் நிலையில் நேற்று வவுனியா கோவில்குளம் கமநலச் சேவைத் திணைக்களத்தில் குறித்த திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பயிரிடப்படாது காணப்படுகின்ற வயல் நிலங்கள் மற்றும் விவசாய நிலங்களில் மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளச்செய்வதனை நோக்கமாகக் கொண்டதாக குறித்த நிகழ்ச்சித் திட்டம் அமையப்பெறுகின்றது. வவுனியா கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபனின் தலைமையின் கீழ் இடம்பெற்ற குறித்த ஆரம்ப நிகழ்வை வவுனியா மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் ஆரம்பித்துவைத்தார். (ச-110)



# மன்னாரில் 'கிளீன் சிறீலங்கா'

மன்னார், பெப். 16

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக 'கிளீன் சிறீலங்கா' வேலைத்திட்டத்தின் கீழ் மன்னார் பட்டித்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள வயோதிபர் இல்லத்தில் நேற்றுச் சனிக்கிழமை சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.பூலோகராஜா தலைமையில் நடைபெற்ற இந்த சிரமதானப்பணியில் மதத்தலைவர்கள், கிராம மக்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ச-25, 56)



# நிதி சேகரிப்பு சைக்கிள்பவனி கொழும்பிலிருந்து வந்தடைவு

யாழ்ப்பாணம், பெப். 16

புத்தூரில் அமைந்துள்ள தூய லூகா மெதடிஸ்த திருச்சபை மருத்துவமனையின் அபிவிருத்திக்கான நிதி சேகரிப்புக்காக கொழும்பிலிருந்து கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட துவிச்சக்கரவண்டிப் பவனி நேற்றுச் சனிக்கிழமை குறித்த மருத்துவமனையை வந்தடைந்துள்ளது.

கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலே புலம்பெயர்ந்து வாழ்கின்றவர், மற்றும் வெளிநாட்டவர்கள் ஒன்றிணைந்து இந்த நிதி திரட்டும் சைக்கிள் பவனியில் ஈடுபட்டனர்.

ஆரம்ப நிகழ்வில் கனேடிய உயர்ஸ்தானிகரும், அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகரும் இணைந்து சுமார் 10 கிலோமீற்றர் தூரம் துவிச்சக்கர வண்டியில் பயணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,27)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உயர்நீதிமன்ற வழக்கையடுத்து

# பல்கலை மாணவரின் வகுப்புத்தடை நீக்கம்

## யாழ். பல்கலைக்கழகம் கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக 4ஆம் வருட சட்டத்துறை மாணவன் சி.சிவகஜனுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்த வகுப்புத்தடை உத்தரவு மீளப் பெறப்பட்டுள்ளது.

தனக்கு விதிக்கப்பட்ட வகுப்புத்தடை சட்ட நியமனங்களுக்கு அப்பாற்பட்டது என்று குறிப்பிட்டு அந்த மாணவனின் தரப்பில் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையிலேயே நேற்றையதினம் அவருக்கு விதிக்கப்பட்ட வகுப்புத்தடை மீளப்பெறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மாணவனுக்கு விதிக்கப்பட்ட வகுப்புத்தடையை 'தவறானது' என்று அறிவிக்கக் கோரியும், இழப்பீடு உள்ளிட்ட நிவாரணங்களைக் கோரியும் குறித்த வழக்குத் தொடரும் என்று மாணவன் சி.சிவகஜனின் தரப்புச் சட்டத்தரணி கலாநிதி குருபரன் தெரிவித்துள்ளார். (ம-26)

### விடுவிப்பு!

ஹமாஸால் விடுவிக்கப்பட்ட மூன்று இஸ்ரேலிய பயணக் கைதிகளுக்குப் பதிலாக 369 பலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

### தட்டுப்பாடு!

ஜேர்மனியில் எரிவாயுவுக்கு மிகப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று ஜேர்மனியின் அரசாங்கம் அறிவித்துள்ளது. (ம)

### எச்சரிக்கை!

மெக்சிகோ வளைகுடாவை அமெரிக்க வளைகுடா என்று பெயர் மாற்றிய கூகுள் நிறுவனத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷென்பாம் எச்சரித்துள்ளார். (ம)

---

**காணி விற்பனைக்குண்டு (தரகர்கள் தேவையில்லை)**

வடமாராட்சியில்

பயிற்செய்கைக்கு உகந்த மேட்டு நிலப்பரப்பு (252 பரப்பு வலிக்கண்டி, குடத்தனையில்) முழுமையாகவோ, பகுதியாகவோ விற்பனைக்குண்டு

மாலை 6.00 - இரவு 9.00 மணிவரை

மேலதிக விபரங்களுக்கு 075 4285417

---

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள EY இலக்க மொறிஸ் மைனர் கார் மற்றும் 7 Sri இலக்க வொக்ஸ்வகன் கார் யாழில் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:
076 693 2227, 077 623 7416

---

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரை அண்மித்த உணவகம் ஒன்றிற்கு உணவு பரிமாறுபவர் மற்றும் சமையல் உதவியாளர் (ஆண்/ பெண்) தேவை.

தொடர்புகளுக்கு:-
077 203 0625

(CS/2556) J-1

---

**வேலையாட்கள் தேவை**

யாழ்நகரில் உள்ள கல்வி நிலையம் ஒன்றிற்கு A/L படித்த பெண் பிள்ளைகள் தேவை.

(CS/57522) N-1

தொடர்பு:- 077 188 2518

---

**தேவை**

முகாமைத்துவமும் கணினி அனுபவமும் உள்ளவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 077 772 2215

---

**காணி விற்பனைக்கு**

கௌதாரிமுனை பிரதான வீதியில் உள்ள ஒரு பக்கம் கடல் மறு பக்கம் பிரதான வீதி கொண்ட 14.5 ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்கு உள்ளது.

விலை பேசி தீர்மானிக்கலாம்

(CR/44336) J-1

077 736 8286, 076 635 6691

---

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள சட்ட அலுவலகத்திற்கு பெண் எழுதுவினைஞர் தேவை.

தொடர்புகளுக்கு: 076 578 9372

---

**விற்பனைக்கு**

யப்பான் சுப்பர் கப் 90 நல்ல நிலையில் விற்பனைக்கு. அத்துடன் நுளம்புக் கொல்லியும் (Mosquito Bat) தொகையாக விற்பனைக்கு உண்டு.

(CS/57535) J-1

077 656 6508

---

**A/L இணைந்த கணிதம்**

A/L 2025, 2026 மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

(CS/57533) J-1

077 832 4002

---

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ 43 வயது திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை.

077 905 8615

---

**வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் அமைந்துள்ள கடை ஒன்றிற்கு Fresh Juice (பிரஸ் ஜுஸ்) தயாரிப்பதற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

(CS/29803) J-1

077 710 7247

---

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

மல்லாகம் KKS Road இல் அமைந்துள்ள ஒழுங்கையில் இரண்டாவது வீடு 2.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 3 அறைகள், குளியலறை, சமையலறை இதர வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.

(CR/44289) J-1

தொடர்பு:- 076 744 8099

---

**காணி விற்பனைக்கு**

அச்சுவேலி மேற்கு கோணாவளையில் 31 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.

(CR/44333) J-1

தொடர்பு:- 077 321 1135

---

**மணமகள் தேவை**

1997, இந்து, றோஹினி, ENGINEER
பூர்வீகம் - இணுவில், வதியுமிடம் - இணுவில்,
மணமகன் பதிவு இல: 11479.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401

(CS/29802A) J-1

www.EQMarriageService.com

---

**மணமகன் தேவை**

1994, கத்தோலிக்கம், DOCTOR
பூர்வீகம் - அச்சுவேலி, வதியுமிடம் - யாழ்ப்பாணம்,
மணமகள் பதிவு இல: 11444.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401

(CS/29802B) J-1

www.EQMarriageService.com

---

**மலிவு விற்பனை**

தையலிற்கு தேவையான அனைத்து பொருட்களும் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.

(CS/57499) J-1

077 666 5628

---

**விற்பனைக்கு**

தனங்களப்பு மன்னார் வீதியில் அமைந்துள்ள சகல வசதியும் கொண்ட வீடு மற்றும் 60 பரப்பு காய்க்கும் தென்னைகள் நிறைந்த தென்னந்தோட்டம் விற்பனைக்கு.

(CR/44288) J-1

தொடர்பு:- 0094 77 425 3573

---

**காணி விற்பனை**

சாவகச்சேரி நுணாவில் ஐயர் வீதியில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 வீதியிலிருந்து 200m தூரத்திலும்
- சாவகச்சேரி பேருந்து நிலையத்திலிருந்து 2 Km தூரத்திலும் அமைந்துள்ளது.

(CS/57505) J-1

077 695 0693

---

**Hotel வேலைக்கு ஆட்கள் தேவை**

சுத்தம் செய்பவர்கள் (ஆண்/ பெண்)
தோட்ட பராமரிப்பாளர் (ஆண்/ பெண்)
காவலாளி (இரவு/ பகல்)
இத்துடன் கடை மற்றும் காணி வாடகைக்கு உண்டு.
விலாசம்:- KKS பிரதான வீதி, கோண்டாவில் மேற்கு, யாழ்ப்பாணம்.

(CS/57523) J-1

077 123 1034

---

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்திருக்கும் பிரபல வெதுப்பகமொன்றின் உற்பத்திக்கு வேலையாட்கள் தேவை. முன்னனுபவம் இருத்தல் அவசியமானது.

மேலதிக கொடுப்பனவுகள்

- நிலையான சம்பளம் மற்றும் மேலதிக படிகள் வழங்கப்படும்.
- யாழ் மாநகர சபைக்கு வெளியே உள்ள பகுதியில் இருந்து வருபவராயின் போக்குவரத்துப் படிகள் வழங்கப்படும்.
- காலை நேர உணவு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

(CS/57494) J-1

077 350 0605, 076 534 3034

---



**ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்**

இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

**அம்மன் அருள் வாக்கு**

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

(CS/2177) J-1

தொடர்புகளுக்கு :- 077 281 1234

---

**வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும்**

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், (தேசிய பாடசாலை), பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டமும், புதிய நிறைவேற்று நிர்வாக குழு தெரிவும் எதிர்வரும் 02.03.2025 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஐயாத்துரை மண்டபத்தில் நடாத்த தீர்மானிக்கப் பட்டுள்ளது. அனைத்துப் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


செயலாளர் - ஐ.யசோதரன்
077 839 1281

(CR/44337) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 06 . 1957



இறப்பு 13 . 02 . 2025

## ஆறுமுகம் சந்திரசேகரம்

**(உரிமையாளர்-விஸ்னுகரன்ஸ் பான்சி, சுன்னாகம் AVP- சந்திரன்)**

காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சந்திரசேகரம் அவர்கள் கடந்த 13.02.2025 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-அன்னமுத்து தம்பதியரின் இளையமகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பமலர் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற P.T.குமாரசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற கனகசபை (அன்னம் ஸ்ரோர்ஸ்-யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை (AVP- சுன்னாகம்), காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் டாம்பிகாதேவி (கிளிநொச்சி), காலஞ்சென்ற நவரத்தினம் (முன்னாள் நீர்கொழும்பு வர்த்தகர்) மற்றும் இராஜேஸ்வரி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனலட்சுமி, காலஞ்சென்ற கனகம்மா, லோகாம்பிகை, காலஞ்சென்ற கனகசிங்கம், அரியமலர் (சோதிமாளிகை), தனபாலசிங்கம் (VTS கந்தானை), உருத்திரசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற வன்னியசிங்கம் (பிரான்ஸ்), தர்மகுலசிங்கம் (லண்டன்), சோதிமலர் (லண்டன்), ஆகியோரின் மைத்துனரும் விஜயகாந்தன் (லண்டன்), விஸ்னுகரன் (லண்டன்), விஜயரூபன் (விஸ்னுகரன் ஸ்பான்சி-சுன்னாகம்), விஜயதாஸ் (லண்டன்), விஜயானந்தா (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கவிதா, ஜஸ்விக்கா, ஜெயவீரலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரிவியன், அருஷா, அபிநயா, அபிருத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு:
**021 224 1290, 077 581 1192**
**077 929 5932**

(Cs/251) N-1

தகவல்:
**குடும்பத்தினர்**

---

# கடை வாடகைக்கு உண்டு

கல்வியங்காடு பிரதான வீதி,
3ம் கட்டையில் கடை
வாடகைக்கு உண்டு.


தொடர்பு:- **077 175 0746**

(CS/25286) J-1

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 07 . 08 . 1938



மறைவு 18 . 01 . 2025

கடந்த 18.01.2025 சனிக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர் பாசமிகு

## அமரர் முத்துத்தம்பி சேனாதிராஜா

(ஓய்வுபெற்ற பொறியியலாளர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் எமது இல்லத்தில் நாளை (17.02.2025) திங்கட்கிழமை நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கேற்கு மாறும் வேண்டுகின்றோம்.

அமரர் சேனாதிராஜாவின் துயரச் செய்தி கேட்டு எமக்கு பக்க துணையாக நின்று எமது துயரத்தில் பங்கேற்று அளப்பரிய உதவிகளைச் செய்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

35, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(cs. 57571 (N-1)

குடும்பத்தினர்
whatsapp: 077 600 5725

---

# முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த 28.02.2024 புதன்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர்**

## தர்மலிங்கம் தர்மஜெயசூரியர்

**(Rtd. Customer Services Manager, Bank of Ceylon)**

தோற்றம் 22.08.1949 — மறைவு 28.02.2024

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு இன்று (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்)

**குடும்பத்தினர்**

அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.


த.ரோகினிதேவி (மனைவி) : 021 223 0785
த.ரோகன்ராஜ் (மகன்) : 077 175 8485
(Rohan Enterprise)
த.தேனுகன் (மகன்) : 077 889 2185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெட்கக்கேடு!

சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களை சமீபத்தில் அமெரிக்க அரசு திருப்பி அனுப்பிய விதம் 'கொடூரமானது, மிகவும் கேவலமானது' என்று பாஜகவின் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான உமா பாரதி கடுமையாக விமர்சித்துள்ளார். அமெரிக்காவில் இருந்து இந்தியர்கள் நாடுகடத்தப்படும்போது கைகளுக்கு விலங்குகள் மாட்டப்பட்டு கொலைக் குற்றம் புரிந்தவர்கள் போல் நாடு கடத்தப்பட்டிருந்தனர். இது பல்வேறு அதிர்வுகளை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறான பின்னணியிலேயே பா.ஜ.க.வின் தலைவர் பாரதியும் அமெரிக்காவின் நடவடிக்கைகளைக் மிகவும் கடுமையாகக் கண்டித்துள்ளார். (ம)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 07.04.1952 — மறைவு 17.01.2025

கடந்த 17.01.2025 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் இராசு பொன்னுத்துரை

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

தபால் கட்டைச் சந்தி,
ஆனைக்கோட்டை.

மனைவி (076 170 2498)
மகன் - டினேஸ் (பிரான்ஸ்),
மகள் - டிலானி (லண்டன்),
மகன் - டிலக்சன் (பிரான்ஸ்)

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 06 . 1940



மறைவு 13 . 02 . 2025

### சின்னப்பு செல்வரத்தினம் (பயில்வான்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும், துரைராசா வீதி, வண்ணார்பண்ணை, நெதர்லாந்து, கொழும்பு கொட்டாஞ்சேனை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு செல்வரத்தினம் (பயில்வான்) கடந்த 13.02.2025 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - முத்தம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மா அவர்களின் அன்புக் கணவரும், அனுரா (லண்டன்), மயூரன் (லண்டன்), மீரா (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியமூர்த்தி (லண்டன்), உஷாகினி (லண்டன்), காலஞ்சென்ற விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான லீலாவதி, கோபால், வாமதேவன் மற்றும் துரைசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பகவதி (கனடா), மகேஸ்வரி, கமலா, சுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சுசிதா - அனோஜன், சந்தோஸ், சுமிதா, அஷ்யா, விதுரன், விஜயலக்ஷ்மி, ரஜீவன், ராகவ், வர்ஷா, அரிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆரவ், ஜடன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41, துரைராசா வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(Cs/57526) N-1

## மரண அறிவித்தல்



மண்ணில் மலர்வு 28.08.1964 — விண்ணில் மலர்வு 13.02.2025

### அமரர் செல்வமலர் சிவகுமாரன்

இணுவில் மேற்கு கோவில் வாசலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வமலர் சிவகுமாரன் அவர்கள் கடந்த 13.02.2025 வியாழக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் துரைராசா சிவகுமாரனின் (உரிமையாளர் கணேசன் சென்றர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் - கதிர்காமநாயகி தம்பதியினரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற துரைராசா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சிந்துஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்), சிவகாசிக்கா (Cost Control Engineer) ஆகியோரின் அன்புத்தாயாரும், ரகுநாதன் (உரிமையாளர் - STR Construction), பிரதீபன் (DFCC Bank) ஆகியோரின் பாசத்திற்குரிய மாமியாரும், விஸ்வகன் இன் அன்புப் பேர்த்தியும், ஜெயகுமரன் (நோர்வே), ஜெயகலா (கனடா), ஸ்ரீகலைவாணி (திருகோணமலை), தனகேசவன் (லண்டன்) மற்றும் பிரசாந்தி (ஆசிரியை - யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு சகோதரியும், சண்முகராஜா (சிவசக்தி - வவுனியா), காலஞ்சென்றவர்களான ஏரம்பமூர்த்தி, சிவானந்தன் ஆகியோரின் அன்பு மருமகளும், கருணை தவசோதியின் பெறாமகளும், நந்தினி (நோர்வே), கணேசகுமார் (துறைமுக அதிகாரசபை - திருகோணமலை), பிரதீபா (லண்டன்), சுரபாஸ்கரன் (ஆசிரியர் - யா / மானிப்பாய் மகளிர் கல்லூரி, சின்னராசா, அருட்செல்வி, காலஞ்சென்ற யோகதாஸ் மற்றும் காலஞ்சென்ற சிவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், லோகநாயகி, கமலாம்பிகை ஆகியோரின் சகலியும், ஸ்ரீதரன் (மைத்துனியின் கணவர்) யதுர்சன், ஜனகன், அஸ்வின், அவ்யா ஆகியோரின் பெரியம்மாவும், ஞானலோஜினி, கோகுலன், இராகுலன் (வைத்தியர்), கோபிதன், சர்மிலன் (வைத்தியர்), பிரதீபன், சிவரூபன், நிதேஷன் ஆகியோரின் சிறிய தாயும், யகதுகஷா, தீப்தன், ஷாருகேசி, ஆரங்கன், சஹானா, நிறஞ்சலா, லக்ஷாயினி ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியாவில் அன்னாரின் இல்லத்தில் (கே.கே.எஸ்.வீதி, இணுவில் மேற்கு இணுவில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 612 8424
077 991 7533

இணுவில் மேற்கு.

(CR/44335) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் ஏற்பாட்டில் வலுவற்ற மக்களின் சமூகத் தேவைப்பாடுகளை அடையாளம் காண்பதற்கான கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. (ச-25.66)



வடமராட்சி கிழக்கு யாழ். ஆழியவளை சி.சி.த.க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை முதல்வர் க. சிவனேசன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி பிராந்தியத்தின் சமுதாய மருத்துவ உத்தியோகத்தரும்,பழைய மாணவனுமாகிய மருத்துவக் கலாநிதி வே. சிவநேசன் , கௌரவ விருந்தினராக யாழ். அல்வாய் சிறிலங்கா வித்தியாசாலை ஆசிரியர் சு.வேலுப்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர்களான பொ.பொன்னம்பலம், வ.நிர்மதிராசா, ஆசிரிய ஆலோசகர் க.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச25, 27)




இளைஞர் விவகார விளையாட்டுத் அமைச்சினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு. இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே தலைமையில் கிளிநொச்சி மாவட்டத் திறன் விருத்தி மண்டபத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது. வடமாகாணத்தைச்சேர்ந்த 47 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச 25, 113)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முகமாலை, முல்லையடி, முகாவில் மற்றும் கச்சார்வெளி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் காலநிலை மாற்றத்தினால் சமூக மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் நீர் வளப் பிரச்சினைகள் மற்றும் பாலினத் தாக்கங்களில் அவற்றின் பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது . (ச 25, 9)




## மரண அறிவித்தல்



### செல்லப்பா அரிந்திரகுமார்

அச்சுவேலியை பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா அரிந்திரகுமார் அவர்கள் கடந்த 13.02.2025 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-செல்லமணி தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் யோகாம்பிகை தம்பதியின் மருமகனும், கலைச்செல்வி (செல்வி) யின் அன்புக் கணவரும் டிகான், கயானி ஆகியோரின் பாசமான தந்தையும் பாலுசங்கரின் மாமனும் பிரணவி, ஆதன் ஆகியோரின் பேரனாரும் காலஞ்சென்ற இந்திராணி, மற்றும் ஈஸ்வரி ரதிமலர், ராணி, பத்மலோயினி, ஜெயமலதா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் தகனத்திற்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 351 1983

(CS 2538) V-1



ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

## 31 ம் நாள் நினைவலைகள்

பிறப்்பு 05 . 10 . 1959



இறப்பு 17 . 01 . 2025

### அமரர் அன்னலிங்கம் விஜயகுமாரி (விஜயா)

அம்மா என அன்புத் தெய்வமே!
ஆறாத் துயரில் கலங்குகின்றேன்
கனிவுடனே பல கதைகள் பேசி
காலையும் மாலையும் என பெயர் கூறி அழைப்பீர்களே!

தனிமையைத் தந்து எமைத் தவிக்க விட்டு
தேற்ற யாருமின்றி வாடுகின்றேன் அம்மா
சுமையாகிப் போன வாழ்வை
சுமப்பதற்குத் திறனின்றி இருக்கின்றேன் அம்மா

ஊரவர்கள் பிரிந்து செல்ல
உறவுகளும் விலகிச் செல்ல
உறுதி மொழி தந்த ஊதாரிகளும் ஓடிச் செல்ல
இறுதியில் எமக்கு தனிமையே நிரந்தரமானது அம்மா!

உங்கள் ஆத்ம சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

சிவன் வீதி,
பரலைக்குளம்
திருநெல்வேலி

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 2539) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுகாதாரப் பராமரிப்புத் துறையை மாற்றியமைத்து 20 வருட நிறைவை கொண்டாடும் பிரீமியம் இன்டர்நேஷனல்

இலங்கையின் ஒரேயொரு தயார்நிலை சுகாதாரப் பராமரிப்பு தீர்வுகள் வழங்குநரான பிரீமியம் இன்டர்நேஷனல், சமீபத்தில் சினமன் லைஃப் ஹோட்டலில் அதன் 20ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. சிரேஷ்ட தலைமை, ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்கள் முன்னிலையில் இக்கொண்டாட்டம் இடம்பெற்றது. கடந்த இரண்டு தசாப்தங்களாக, சுகாதாரப் பராமரிப்புத் துறையை மீள்வரையறை செய்து, புத்தாக்கம், மீள்தன்மை மற்றும் ஒப்பிடமுடியாத நிபுணத்துவத்தை இணைக்கும் ஒருங்கிணைந்த தீர்வுகளை வழங்குவதில் ஒரு முன்னோடியாக நிறுவனம் தன்னை வெற்றிகரமாக நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.




இரண்டு தசாப்த கால நிறுவனத்தின் புகழ்பெற்ற பயணம் தொடர்பில், நிறுவனத்தின் தலைவரும் அதன் நிர்வாக பணிப்பாளருமான பிரசாந்த குலரத்ன கருத்து வெளியிடுகையில், "இலங்கையில் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் தொலைநோக்குப் பார்வையுடன் பிரீமியம் இன்டர்நேஷனல் நிறுவப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளில் ஏற்பட்ட, பல்வேறு சுகாதார நெருக்கடிகளுக்கு நாம் பதிலளித்துள்ளோம். அத்துடன் நாட்டில் பராமரிப்பு மற்றும் உட்கட்டமைப்பின் தரங்களை மீள்வரையறை செய்த முன்னோடித் திட்டங்களை நாம் செயற்படுத்தியுள்ளோம். நாம் மக்கள் மத்தியில் பெற்றுள்ள நம்பிக்கை, நாம் செயற்படுத்திய புத்தாக்கம் மற்றும் நாம் காப்பாற்றிய உயிர்கள் தொடர்பில் நாம் பெருமையடைகிறோம்." என்றார்.

நாட்டின் சுகாதாரப் பராமரிப்பு கட்டமைப்பை அதல பாதாளத்திற்குள் தள்ளிய சுனாமிப் பேரழிவுக்கு மத்தியில் பிரீமியம் இன்டர்நேஷனல் 2004 இல் தனது பயணத்தை ஆரம்பித்தது. மருத்துவமனைகள் அழிக்கப்பட்ட நிலையில், சர்வதேச நன்கொடையாளர்களிடமிருந்து சுகாதார உபகரணங்கள் வந்தடைந்த போதிலும், உரிய உட்கட்டமைப்புகள் இல்லாமை காரணமாக அவற்றை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. நன்கொடையாளர்களுக்கும் உள்ளூர் சுகாதார வசதிகளுக்கும் இடையே ஒரு முக்கியமான பொறியியல் பாலமாக பிரீமியம் இன்டர்நேஷனல் நுழைந்து, சுகாதார உபகரணங்களை வழங்குவதைத் தாண்டி, அத்தியாவசிய உட்கட்டமைப்பை அது மீண்டும் கட்டியெழுப்பியது. அந்த வகையில், தயார்நிலை உற்பத்தி சுகாதாரத் தீர்வுகளில் சந்தைத் தலைவராக நிறுவனத்தின் பங்கின் தொடக்கத்தை இது எடுத்துக் கூறியது.

பிரீமியம் இன்டர்நேஷனலிடம் காணப்படும் ஒரு முக்கிய வேறுபாடு யாதெனில், அதன் புத்தாக்கம் மற்றும் உள்ளூர் திறன் மேம்பாட்டிற்கான அதன் அர்ப்பணிப்பு ஆகும். இதைப் பிரதிபலிக்கும் வகையில், 2012 ஆம் ஆண்டில், மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் (UoM) கூட்டுச் சேர்ந்து இலங்கையின் முதலாவது உயிரியல் வைத்திய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகத்தை (Biomedical research and development laboratory) நிறுவனம் நிறுவியது. இது சுகாதார தொழில்நுட்பத்தில் உள்ளூர் நிபுணத்துவத்தை வளர்க்கும் அதே வேளையில் நாட்டின் முதலாவது உயிரியல் வைத்திய பொறியியல் பட்டப்படிப்புத் திட்டத்திற்கு வழி வகுத்தது. கொவிட்-19 தொற்றுநோய் காலத்தில், modular ICU பிரிவை வடிவமைத்து நன்கொடை அளித்ததன் மூலம் அதன் சந்தைத் தலைமையையும் புத்தாக்கத்தையும் பிரீமியம் மீண்டும் நிரூபித்தது. 24 மணி நேரத்திற்குள் போக்குவரத்து செய்யக்கூடியதாகவும் செயற்படக்கூடியதாகவும் இருந்த இந்த அலகானது, நெருக்கடியின் போது ஒரு முக்கியமான உயிர்நாடியாக செயற்பட்டதோடு, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அங்கீகாரத்தைப் பெற்றது.

உட்கட்டமைப்பு மேம்பாட்டில் நிறுவனத்தின் சாதனைகள் ஒவ்வொன்றும் ஒப்பிட முடியாத அளவில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. தெற்காசியாவின் மிகப்பெரிய மகப்பேற்று மருத்துவமனையான ஜேர்மன்-இலங்கை நட்புறவு பெண்களுக்கான மருத்துவமனையை முழுமைப்படுத்துவதில் பிரீமியம் முக்கிய பங்கு வகித்தது. கட்டுமான தாமதங்களும் சவால்களும் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக திட்டத்தை முடக்கிய நிலையில், அதை வெறுமனே 24 மாதங்களுக்குள் நிறைவு செய்ய பிரீமியம் முன்வந்தது. கட்டுமானத்திற்கு அப்பால், மருத்துவமனையின் மருத்துவ, ஆய்வக மற்றும் தொழில்துறை உபகரணங்களில் 65% இற்கும் அதிகமானவற்றை நிறுவனம் வழங்கி அதனை செயற்படுத்தியது. CSSD, சலவை மற்றும் சமையலறை உள்ளிட்ட மைய வசதிகள், மிகவும் மேம்பட்ட நவீன தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்டிருந்தன. இது அம்மருத்துவமனையை இலங்கையில் நவீன சுகாதார உட்கட்டமைப்பிற்கான ஒரு அளவுகோலாக மாற்றியது.



உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற சுகாதாரப் பராமரிப்பு வர்த்தகநாமங்களுடனான பிரத்தியேக கூட்டாண்மைகள் மூலம், தொடர்ச்சியாக இலங்கைக்கு, புரட்சிகரமான தொழில்நுட்பங்களை பிரீமியம் இன்டர்நேஷனல் அறிமுகப்படுத்தி வருகிறது. Sakura histopathology தொகுதிகள் நாட்டில் தற்போது 80% புற்றுநோய் கண்டறிதல் மற்றும் நோயறிதலை செயற்படுத்துகின்றன. அதே நேரத்தில் Fujifilm மற்றும் Erbe ஆகியன சிகிச்சை மற்றும் நோயறிதல் நடைமுறைகளுக்கு மிகவும் மேம்பட்ட எண்டோஸ்கோபி தளங்களை வழங்குகின்றன. Fresenius Kabi, Hettich, Werfen ஆகிய ஜேர்மனி மற்றும் அமெரிக்க தொழில்நுட்பங்கள் மூலம் இரத்த சேகரிப்பு மற்றும் செயலாக்கம் புரட்சிகரமானதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட குருதியில் 95% இற்கும் அதிகமானவை தினமும் செயலாக்கப்படுவதை இது உறுதி செய்கிறது.

2007 ஆம் ஆண்டில், பிரீமியம் இன்டர்நேஷனல் நாடு தழுவிய மருத்துவ தொழில்நுட்ப மேம்படுத்தல் திட்டத்தை முன்னெடுத்தது. இது இலங்கை முழுவதும் 24 வைத்தியசாலைகளை நவீனமயமாக்கியது. ஒஸ்ட்ரியாவால் நிதியளிக்கப்பட்ட இந்த முக்கிய திட்டத்தில், CT scanners, digital X-rays, video endoscopy systems, ventilators மற்றும் அவசர emergency backup power generators போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, மேம்பட்ட சுகாதார சேவைகளுக்கு அடித்தளம் அமைத்தது. ஐந்து வருடங்களுக்குப் பின், 2012 ஆம் ஆண்டில், இலங்கை தேசிய வைத்தியசாலையில் உள்ள catheterisation labs இனை நவீனமயமாக்கியதன் மூலம், அதிநவீன உயவா டயடிள ஆய்வகங்கள் மற்றும் echo-Doppler பிரிவுகாளக அதனை மாற்றியமைத்ததன் மூலம், இலங்கையில் இருதய சிகிச்சையின் தரத்தை நிறுவனம் உயர்த்தியது.



அது மாத்திரமன்றி, நாட்டில் 300 இற்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சை நிலையங்கள் Shinva நிறுவனத்தின் அதிநவீன தொற்றுக் கட்டுப்பாட்டு தீர்வுகளால் இயங்குகின்றன. இவை நாட்டின் முக்கியமான சுகாதாரப் பாதுகாப்பு தேவைகளைப் பூர்த்தி செய்ய 24 மணி நேரமும் செயற்படுகின்றன.



2014 ஆம் ஆண்டில் பிரீமியத்தின் சிறந்த தாக்கமானது, மேலும் நீடிக்கும் வகையில் நாட்டின் இரத்த வங்கிகளை சென்றடைந்தது. இந்த பிரிவுகளின் பங்கை மாற்றியமைக்க ஒரு மைல்கல் திட்டத்தை நிறுவனம் செயற்படுத்தியது. 19 பிராந்திய மையங்களை நிறுவி, 96 இரத்த வங்கிகளை அதிநவீன தொழில்நுட்பத்துடன் மாற்றியமைத்ததன் மூலம், 25 மில்லியன் யூரோ நிதி கொண்ட இந்த திட்டம் இரத்த சேமிப்பு மற்றும் இரத்தமாற்ற தரங்களை உயர்த்தியதன் மூலம், உயிர்களைக் காப்பாற்றுவதில் அதிக செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மையை உறுதிசெய்தது.

பிரீமியம் இன்டர்நேஷனலின் பங்களிப்புகள் மருந்துத் துறைக்கு விரிவடைவதோடு, அது உள்ளூர் உற்பத்தியில் முன்னேற்றங்களை ஏற்படுத்துகின்றது. ஆரம்பத்தில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு (SPMC) தொழில்நுட்ங்கள் மூலம் ஆதரவு வழங்கிய நிறுவனம், பின்னர் LAUGFS Holdings உடன் இணைந்து இலங்கையின் மிகவும் மேம்பட்ட தனியார் துறை Aseptic pharmaceutical plant தொழிற்சாலையை உருவாக்கும் சவாலை ஏற்றுக்கொண்டது.

2023 ஆம் ஆண்டில், George Steuart உடன் இணைந்து "Seregen" எனும் தனது சொந்த மருந்து உற்பத்தி தளத்தை பிரீமியம் நிறுவனம் ஆரம்பித்தது. இது இலங்கையில் அதிகளவான மருந்து உற்பத்தி சுதந்திரத்தை ஏற்படுத்துவதை நோக்கிய ஒரு முக்கிய படியைக் குறிக்கிறது.

அந்த வகையில் பிரீமியம் இன்டர்நேஷனல் இரண்டு தசாப்த கால விசேடத்துவத்தைக் கொண்டாடும் அதே வேளையில், இலங்கையில் சுகாதாரப் பாதுகாப்பின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தொடர்ச்சியாக உறுதியுடன் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத்திறனாளிகள் தடகளம் பச்சிலைப்பள்ளிக்கு முதலிடம்



பளை, பெப். 16
மாவட்ட ரீதியிலான மாற்றுத்திறனாளிகளுக்கான தடகளப்போட்டியில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக அணி முதலிடம் பெற்றுள்ளது.
கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் சமூகசேவைகள் திணைக்களமும் இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய மாற்றுத்திறனாளிகளுக்கான தடகளப்போட்டிகளில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி மற்றும் பச்சிலைப் பள்ளி ஆகிய பிரதேச செயலகங்களின் அணிகள் பங்குபற்றியிருந்தன. (ச-25.9)

## பாடசாலைக்...

பாடசாலைக் கல்வி முறையில் ஏற்பட்ட தோல்வியே காரணம். இதை எமது அரசாங்கம் சரிசெய்யும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்திருந்த பிரதமர் ஹரிணி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் சென்றார். அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
பிரதமர் ஹரிணி மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாண இந்துக் கல்லூரி நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கையின் பிரதான பாடசாலைகளில் ஒன்றாகும். இந்தப் பாடசாலை அடைந்துள்ள சாதனைகள் பற்றி நீங்கள் வழங்கிய அறிக்கை மிகவும் சிறப்பானது. பாடசாலையின் கணக்கு நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெற்ற விதம் ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாகும். கல்விக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது.
இன்று பகுதிநேர வகுப்புகள் அதிகளவில் வளர்ச்சியடைந்துள்ளன. கல்வித் துறையில் மாற்றத்தை ஏற்படுத்த நாங்கள் எதிர்பார்க்கின்றோம். எமது கல்வி முறையின் தோல்வியின் காரணமாகவே இந்த மேலதிக வகுப்புக் கலாசாரம் வளர்ச்சியடைந்துள்ளது. மேலதிக வகுப்புகள் குறைக்கப்பட வேண்டுமானால் எமது குழந்தைகளுக்கு பாடசாலை மூலம் சிறந்த கல்வியை வழங்கவேண்டும். கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் வடமாகாண கல்வி அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. அது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.
நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ, தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26)

## இளங்குமரன்...

தனங்கிளப்புப் பகுதியில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. இளங்குமரன் எம்.பி. பயணித்த கார் பட்டாரக வாகனத்துடன் மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் மேலும் இருவர் காயமடைந்துள்ளார்.
பிரதமர் ஹரணி அமரசூரியவின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்வுகளுக்கான முன்னாயத்த நடவடிக்கைகளைச் செய்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தபோதே, இளங்குமரன் எம்.பி.யின் கார் விபத்துக்குள்ளானது என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
(அ-ம-26-28-27-113-125)

## அனைத்து...

கலந்துகொண்டார். அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
பிரதமர் ஹரிணி மேலும் தெரிவித்ததாவது:-
முதல்முறையாக வட்டுக்கோட்டைக்கு வந்திருக்கின்றேன். இங்குள்ள மக்களைச் சந்தித்ததில் உண்மையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நாட்டின் வரலாற்றை மாற்றியெழுதிய பெருமை வட்டுக்கோட்டை மக்களுக்கும் உள்ளது. சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஒரு குடிமகனை இன்று நாட்டின் ஜனாதிபதியாக நீங்கள் மாற்றியிருக்கின்றீர்கள். நாடாளுமன்றத்தில் இன்று பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. உங்களின் பிள்ளைகள், உங்களுடன் திரிந்தவர்கள், உங்களின் உறவுகள் இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார்கள்.
உங்களின் பிரச்சினைகளை அவர்கள் நேரடியாக அறிவார்கள். அவர்கள் உங்களுக்காக அர்ப்பணிப்புடன் வேலை செய்யவுள்ளனர்.
இன்றைய நாடாளுமன்றத்தில் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள், தொழிற்சங்கவாதிகள் இருக்கின்றார்கள், மலையக மக்களின் பிள்ளைகள் இருக்கின்றார்கள். அத்துடன், இம்முறையே கட்சியொன்று நாட்டின் 25 மாவட்ட மக்களின் ஆதரவைப் பெற்றுச் சாதனைபடைத்திருக்கின்றது.
இலங்கையின் சிறப்பம்சங்களில் ஒன்று பல்வகைமையாகும். உரிமைகள் அனைவருக்கும் உரியன. ஆதலால் அனைத்து இன மக்களுக்கும் கௌரவமான வாழ்க்கையை எமது அரசாங்கம் உறுதிப்படுத்தும். இங்கே பிரச்சினைகள் இருக்கின்றன. விவசாயிகளின் நிர்ணய விலை, இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு எனப் பல்வேறுபட்ட விடயங்கள் உள்ளன. அனைத்துக்கும் நாங்கள் தீர்வைத் தேடிவருகின்றோம் - என்றார்.
(அ-ம-125)

## இலங்கையின்...

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சஜித் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இன்று நாடு மிகவும் பலவீனமான பாதையில் பயணித்துவருகின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளியேறிவருகின்றனர். முதலீட்டாளர்களைத் தக்கவைக்க அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.
2028ஆம் ஆண்டில் நாங்கள் நாணய நிதியத்துக்குக் கடன்களைத் திரும்பச் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். ஆதலால் இது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். கடன்களைச் செலுத்தவேண்டுமானால், நாட்டின் வருமானத்தை அதிகரித்திருக்க வேண்டும். அப்போதுதான் எம்மால் மீண்டுவர முடியும். ஆனால், அதற்குரிய எந்தத் திட்டங்களும் தற்போதைய அரசாங்கத்திடம் இல்லை.
உள்ளூராட்சித் தேர்தலுக்கு நாம் தயாராகவே உள்ளோம். பலவீனமான அரசாங்கத்துக்கு எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்மூலம் பாடம் கற்பிக்கப்படும் - என்றார். (அ-ம-இ)

## பாடசாலைக்குள்...

'பாடசாலைக்குள் அரசியல்வாதிகள் நுழைவதைத் தடைசெய்ய வேண்டும். இதுவொரு தவறான கலாசாரம்' என்று பிரதமர் ஹரிணி நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றார். இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்த காலத்திலும், அதற்குப் பின்னரும்கூட இந்தக் கருத்துக்களை அவர் வலியுறுத்தியிருந்தார். ஆனால், யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட பிரதமர் ஹரிணி, பாடசாலையொன்றில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டபோது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரும், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ளனர்.
தேசிய மக்கள் சக்தியினரின் இந்த நடவடிக்கை சமூக ஊடகங்களில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. தேசிய மக்கள் சக்தியினர் சொல்வது ஒன்றாகவும், செய்வது இன்னொன்றாகவுமே இருக்கின்றது என்று அரசாங்கத்துக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. (அ-ம)

## யாழ்ப்பாணத்தில்...

பகுதிகளுக்கு அருகாகவுமே நூற்றுக் கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.
(அ-ம-125)

## செம்மணியில்...

யாழ்ப்பாணம் - செம்மணிப் பகுதியில் மண்டபம் அமைப்பதற்காக குழிகள் வெட்டப்பட்டபோது, அதற்குள் மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன. இந்த விடயம் பெரியளவில் பேசுபொருளானது. இந்த நிலையில், தமிழ்த்தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அங்கு நேற்று நேரில் சென்று கள நிலவரங்களை ஆராய்ந்தார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
கஜேந்திரகுமார் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-
தகனமேடை ஒன்றை அமைப்பதற்காக நல்லூர்ப்பிரதேச சபையினர் சிந்துபாத்தி மயானத்தில் தோண்டியபோது மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இருப்பினும் நல்லூர்ப் பிரதேசசபையோ அல்லது குறித்த வேலைத்திட்டத்தை மேற்கொண்டவர்களோ இதுவரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யவில்லை. எமது கட்சியைச் சேர்ந்த ஒருவர் இந்த மயான நிர்வாகத்தில் உள்ளார். ஆதலால், நாங்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.
இந்தப் பிரதேசமானது அண்ணளவாக 600 தமிழ்ப் பொதுமக்கள் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட இடமாகச் சொல்லப்படுகின்றது.
கிருசாந்தி படுகொலை வழக்கில் குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்ட நபர் தெரிவித்த தகவலின் அடிப்படையில் செம்மணியில் இடம்பெற்ற படுகொலைகள் அம்பலமாகின. அவர் 10 இடங்களைக் கூறிய நிலையில் அவற்றில் இரண்டு இடங்களில் மாத்திரமே தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஏனைய இடங்களில் கணிசமான அளவு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக நாம் சந்தேகிக்கின்றோம்.
இந்த மயானத்தில் கடந்த 2011ஆம் ஆண்டு காலப்பகுதி வரை இராணுவத்தின் முகாம் அமைக்கப்பட்டிருந்தது. 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து பேணப்பட்டுவந்த ஆவணங்களில் இருந்து பெறப்பட்ட உத்தியோகபூர்வத் தகவல்களின் அடிப்படையில், இந்த மயானத்தில் தற்போது புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ள பகுதியில் எவரும் புதைக்கப்படவில்லை. ஆகவே இந்த மனிதப் புதைகுழி குறித்து தீவிரமாக ஆராய்வது முக்கியமான ஒன்றாகும். செம்மணிப் படுகொலைகளின் தகவல்கள் அம்பலமாகிய நிலையில் அது தொடர்பான விசாரணைகள் முடிவுறாத நிலையில்தான் இந்தப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது - என்றார்.
(அ-ம-20)

## உள்ளூராட்சி...

உள்ளூராட்சி அதிகாரசபைகள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டவரைவு மீதான இரண்டாம் வாசிப்பை நாளை நடத்துவதற்குத் தீர்மானித்திருந்த நிலையில், நாளைய தினமே சட்டவரைவு வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம், சட்டமாக்கப்பட்டு 14 நாள்களுக்கு பின்னர் வேட்புமனுக் கோரலுக்கான திகதி அறிவிக்கப்பட வேண்டும். ஆதலால், உள்ளூராட்சித் தேர்தலை அவசரமாக நடத்தும் வகையில் அரசாங்கம் இந்த முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி உடன்படிக்கையை மறுத்தார் உக்ரைன் அதிபர்

வொஷிங்டன், பெப். 16

அமெரிக்கா சமர்ப்பித்துள்ள அமைதி உடன்படிக்கையில், உக்ரைனுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை என்று உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் அமெரிக்காவால் முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த முன்மொழிவு தொடர்பில் ரஷ்ய உயர்மட்ட அதிகாரிகளும், உக்ரைனிய உயர்மட்ட அதிகாரிகளும் பரிசீலனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியிலேயே, அமெரிக்க முன்மொழிவில் உக்ரைனின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லை என்றுஷெலன்ஸ்கி கூறியுள்ளார்.

அமெரிக்காவின் முன்மொழிவில் உக்ரைன் வரவேற்கும் படியான விடயங்கள் எதுவும் இல்லை. ஆதலால், இந்த உடன்படிக்கை தொடர்பில் நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. அமெரிக்காவின் முன்மொழிவின் அடிப்படையில் போரை நிறுத்தினால், உக்ரைனின் நிலம் மட்டுல்ல வளமும் பறிபோகும் என்றும் ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் பாதுகாப்பை ஐரோப்பிய நாடுகள் பொறுப்பேற்க வேண்டும். அதற்குரிய காலம் இது. ஐரோப்பிய இராணுவக் கூட்டணியொன்றை உக்ரைனில் ஏற்படுத்த நான் அழைப்பு விடுக்கின்றேன் என்றும் ஷெலன்ஸ்கி மேலும் கூறியுள்ளார். (ம)



## உடன் தேவை

யாழ் நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனமொன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை

- அலுவலக உதவியாளர் (Clerk) (பெண்)
- தரம் 6 முதல் 9 வரை சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்
- தரம் 1 - 5 வரை சகல பாடங்களும் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள்

தொடர்பு: 077 459 8440


## மரண அறிவித்தல்



பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர குருக்கள் சதானந்த சர்மா (தாடி ஐயா)

பாரத்வாஜ கோத்திரம் வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும் கொக்குவில் மாத்தனை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவில் வசித்து வந்த பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர குருக்கள் சதானந்த சர்மா (தாடி ஐயா) நேற்று (15/02/2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மாத்தனை சர்வேஸ்வர குருக்கள்-சாரதாம்பாள் தம்பதிகளின் மூத்த மகனும் மயிலனி சர்வேஸ்வர குருக்கள்-மனோன்மணி அம்மாவின் மூத்த மருமகனும், காலம் சென்ற ருக்மணி தேவியின் அன்பு கணவரும், ஸ்ரீதர ஷர்மா சாந்தினிதேவி, சந்திரா (அமரர்), ஈஸ்வர சர்மா ஆகியோரின் தந்தையும் அன்பரசி, வனஜா ஆகியோரின் மாமனாரும் நிவேதா, கவிதா, றமேஷ், லலித்யா, சிவராம் ஆகியோரின் பேரனும் பாலநாகேஸ்வரி, ரஞ்சிதானந்த சர்மா, பராசக்தி (அமரர்), ஏரம்பநாத சர்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (16/02/2025) ஞாயிற்றுக்கிழமை மாலை 03.00 மணியளவில் கோண்டாவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இறுதி கிரியை நடைபெற்று. கோண்டாவில் அமைந்துள்ள கட்டையால்லடி இந்து மயானத்தில் அன்னாரின் பூத உடல் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பழனியாண்டவர் கோவிலடி
இருபாலை வீதி
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 6914158

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 03 . 1944



மறைவு 12 . 02 . 2025

சுப்பிரமணியம் பரமேஸ்வரன்

சரயாழ். சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரமேஸ்வரன் அவர்கள் கடந்த 12.02.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராஜகுலசூரியர் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சொர்ணாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும், நாகலோஜினி (பிரித்தானியா), சசிகலா (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரன் (பிரித்தானியா), சிவகுமார் (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஷ், ஹனீஷ், ஹர்ஷிகா, ஹேஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும், ஜானகியம்மா, காலஞ்சென்ற ஞானாம்பிகை மற்றும் கந்தசாமி, சண்முகரட்ணம், சண்முகதாஸ், நவநீதமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிங்கமாப்பாணர் மற்றும் சர்வாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சுன்னாகம் சிவபூதவராயர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்: குடும்பத்தினர்
+94 212 242 015
கரன் - மருமகன் - +94 775 988 782

பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு,

(CS/57531) J–1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 10 . 1947



மறைவு 15 . 02 . 2025

முருகேசு ஞானேஸ்வரன் (சற்குணம்)

மாவிட்டபுரம் வீணியவரையைப் பிறப்பிடமாகவும், மடத்தடி, கொல்லங் கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஞானேஸ்வரன் அவர்கள் நேற்று (15.02.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு மற்றும் - பூதாத்தைப்பிள்ளை ஆகியோரின் மகனும், அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன் (பெற்றி ரீச்சர், முன்னாள் வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆலோசகர் , முன்னாள் யா/ மகாஜனக் கல்லூரி ஆசிரியர், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்) அவர்களின் கணவரும், அபர்ணா ஜெகதீஸ்வரன் (ஆங்கில ஆசிரியர் யா/ சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயம், யா/ அளவெட்டி அமெரிக்கன் மிசன் வித்தியாலயம்) அவர்களின் தந்தையும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் (யா/மத்திய கல்லூரி கணித ஆசிரியர்) அவர்களின் மாமனாரும், ஜதுன் ஜெகதீஸ்வரன் (மகாஜனக் கல்லூரி 11ம் ஆண்டு) அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கீரிமலை செம்பொன்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஐயக ஜதுனம் அரசடி வீதி,
மாவிட்டபுரம் தெற்கு,
மாவிட்டபுரம்.

தகவல் :
அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன் (மனைவி)
077 064 1164

(CS/57528) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

அறிவியல் நகரில் இயங்கும்
சைவ உணவகம் ஒன்றிற்கு
தங்கி இருந்து வேலை
செய்யக்கூடிய சமையல்காரர்
துப்புரவாளர் தேவை.

தொடர்பு:- 077 799 3331

(CS/57529) J-1

## SPOKEN ENGLISH & GRAMMAR

ஆங்கிலம் பேச விரும்பும்
தொழில் புரிவோர், Grade 7 to GCE
O/L A/L, பட்டதாரிகள்
English Medium Students உட்பட
(யாழ்நகரில் வீடுவந்தும் கற்பிக்கப்படும்)
கொழும்பில் பலவருடம் கற்பித்த அனுபவ
ஆசிரியர் : K. Ganesh BA
யாழ் நாவலர் - அன்னசத்திர வீதி.
077 766 8725

## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள
பலசரக்கு கடையொன்றில்
தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய
ஆண் வேலையாட்கள் தேவை.
பில் கணக்கு போடக்கூடியவர்கள்
விரும்பத்தக்கது.
சமைக்கக்கூடியவர்கள் (மதிய உணவு)
விரும்பத்தக்கது. சம்பளம் - 60.000/-

077 480 3379

(CS/57521) J-1

## அறை வாடகைக்கு

யாழ். செயலகத்தில் இருந்து சுமார்
00 மீற்றர் தூரத்தில் A9 வீதி (கண்டி வீதி,
பெந்தோகொஸ்த மிசனுக்குமுன்னால்)
ரியான குளியல் அறையுடன் அறை ஒன்று
ஒரு நபருக்கு வாடகைக்கு உண்டு. பொது
விறாந்தையும் பாவிக்க முடியும். வாடகை
பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

076 291 3995

(CS/57727) J-1

## வயல் காணி விற்பனைக்கு

கிளிநொச்சி உருத்திரபுரம் 8 ஆம்
வாய்க்கால் பிரதேசத்தில் இரணைமடு
நீர்ப்பாசன திட்டத்திற்குட்பட்ட
இரண்டு போக தண்ணீர் பங்கு
கொண்ட 2 ஏக்கர்களாக பிரிக்கப்பட்ட
4 ஏக்கர் உறுதிக்காணி
விற்பனைக்கு உண்டு.

077 645 0375 , 077 575 0882

(CS/29804) J-1

## வேலையாட்கள் தேவை

அரியாலையில் இயங்கும் பல்பொருள்
அங்காடி (சுப்பர் மார்க்கட்) ஒன்றிற்கு
வேலையாட்கள் தேவை.ஆண், பெண்
இருபாலாரும் விரும்பத்தக்கது. (அரியாலை
பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு: 077 540 0425

(CS/57514) (N-1)

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள கடை ஒன்றிற்கு
O/L, A/L படித்த ஆண், பெண் இருபாலாரும்
தேவை. யாழ் நகரை அண்மித்தவர்கள்
விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 538 9987

(CS/57525) J-1

## ஆங்கில வகுப்புக்கள்

Online முறையில் அடிப்படை ஆங்கில அறிவை
மேம்படுத்த (Grammar, Writing and Spoken) 9 ஆம்
ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள்
அனைவருக்கும் கற்றுக் கொடுக்கப்படும்.
மணித்தியாலத்திற்கு 400/- மட்டும்
தொடர்பு:- 077 079 5914
Whatsapp:- +14 372 352 797
Email Address :- kanesiva6@gmail.com

(CS/57477) J-1

## மணமகள் தேவை

யாழ். இந்து, கௌரவ குடும்பம் (V) 1984 August பிறந்த
5'9" உயரம், அவிட்டம் நட்சத்திரம் (2ம் பாதம்) 7 இல்
செவ்வாய் உள்ள DUBAI இல் Senior Accountant ஆக
தொழில் புரியும் CIMA (UK), MBA (UK) படித்த
மணமகனுக்கு படித்த தொழில் புரியும் மணமகள் தேவை.

076 855 0019, 077 268 4477

(CS/2523) J-1

## வேலைவாய்ப்பு

- **ஆங்கில தமிழ் மொழி மூலமான பாலர் பாடசாலையில் ஆங்கில, தமிழ் ஆசிரியர்கள் தேவை.** ( Female)
  நேர்முகத் தேர்வு: 17.02.2025 ம் திகதி காலை 8.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை நடைபெறும்.
  பழக விரும்புபவர்களுக்கு 03 மாத பயிற்சிகள் வழங்கப்படும்.
- **கணினி நிலைய வேலைவாய்ப்பு** (Female)
  (MS Office, Photoshop, Page Maker, Corel Draw தெரிந்தவர்கள்)
- **அலுவலக உதவியாளர் (ஆண்கள்)**
  (ஆட்டோ, வான் ஓடக்கூடியவர். Licence உள்ளவர்) வேலை ஆரம்பிக்கும் நேரம் காலை 7.00)

நேர்முகத் தேர்வு : 17.02.2025 ம் திகதி மு.ப 11.00 மணி தொடக்கம் ந.ப 12.00 மணி வரை நடைபெறும்.
புத்தூர், திருநெல்வேலி, இணுவில் ஆகிய இடங்களிற்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்

தொடர்புகளுக்கு:- 077 377 0524

(CS/557502) J-1

## சிறுநீரகம் தேவை

"O" குருதி வகை சேர்ந்த
ஒருவருக்கு
"O" குருதிவகை சிறுநீரகம்
அவசரமாக தேவை.
42 வயதிற்குட்பட்ட ஆண், பெண்
இருபாலாரும் விரும்பத்தக்கது.
HLA Report இருப்பின்
Whatsapp பண்ணவும்.

076 540 6732 (Whatsapp/ Call)
077 545 2892

(CS/57524) J-1

## Highgatehill Murugan Temple
## 200A, Archway Road, London N65BA

### Religious Hindu Priest Needed
### இந்து சமய குருமார் (குருக்கள் ) தேவை - 3 பேர்

**வேலை தொடர்பான விபரம்:**

- **இடம்** :- உயர்வாசற்குன்று - லண்டன்
- **வேலை மணிநேரம்** :- வாரத்திற்கு 35 மணித்தியாலம்
- **வேலை நாள்** :- வாரத்திற்கு 5 -6 நாட்கள்
- **சம்பளம்** :- ஆண்டிற்கு £ 23,000
- **வேலை வகை 1** :- முழுநேர வேலை

### விண்ணப்ப இறுதி திகதி: 17.03.2025

**எம்மைப் பற்றி :**

பிரித்தானியாவில் உயர்வாசற்குன்று முருகன் கோவிலை நடத்தும் இந்து சமய (சிவ) அறக்கட்டளை நிறுவனம், கோவில் மூலமாக இந்து சமயத்தைப் பரப்புவதும் இந்துசமய சடங்குகளைச் செய்வதனையும் மேற்கொண்டு வருகின்றது.
ஆலயம் வாரத்தில் 7 நாட்களும் காலை 8.00 மணிமுதல் மதியம் 2.00 மணி வரையிலும், மாலை 5.00 மணிமுதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கும்.

**பூஜை நேரங்கள்**

**காலை 8.00 மணி, 12.00 மணி, மாலை 5.00மணி, இரவு 8.00 மணி**
**பண்டிகை மற்றும் சிறப்பு மங்கள நாட்களில் நீடிக்கப்பட்ட நேரம் பின்பற்றப்படும்.**

**ஊதியம்:**

விண்ணப்பதாரருக்கு (குருக்கள்) வாரத்திற்கு 35 மணிநேர வேலைக்காக £ 23,000 ஆண்டிற்கு ஊதியமாக வழங்கப்படும். இது இங்கிலாந்தின் தேசிய குறைந்தபட்ச ஊதிய விதிமுறைகளுக்கு உள்ளடங்கியதாகும். விடுமுறை ஊதியம் மற்றும் பிற சலுகைகளும் வழங்கப்படும்.

**வேலை விபரம்:**

- குருக்கள், கோவில் தொடர்பான அனுஷ்டானங்களில் / செயற்பாடுகளில் உதவி செய்பவராகவும் இருக்க வேண்டும்.
- தெய்வங்களின் இருப்பிடத்தையும் அதன் வடிகால்களையும் சுத்தமாக நேர்த்தியாக வைத்திருக்க வேண்டும்.
- தெய்வங்களை அலங்கரிப்பதோடு மாலைகள் கட்டத் தெரிந்திருக்க வேண்டும்.
- தெய்வங்களுக்கான நைவேத்தியம் மற்றும் பக்தர்களுக்கான பிரசாதம் செய்யத் தெரிந்திருத்தல் வேண்டும். தமிழ்நாடு, இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள சைவசமய மரபுகளின் படி பல்வேறு கோயில் தொடர்பான அனுஷ்டானங்கள், சடங்குகளில் தீவிரமாக பங்கேற்பதோடு அது தொடர்பான கடமைகளையும் செய்ய வேண்டும்.
- குருக்களுக்காக ஆலய நிர்வாகம் வழங்கும் தங்குமிடங்களில் அவர் சேவைகாலத்தில் வசிக்க முடியும்.
  **ஒரு சைவக்குருக்கள்** பிரசாதம் மற்றும் ஈமக்கிரியைகள் செய்யத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

**வேலைக்கான தகுதிகள் & திறன்கள்**

- இந்துசமய சைவக்கடவுள்களை வழிபடுதல் மற்றும் பூஜைகள் செய்வதே பிரதான வேலை கடமையாக இருப்பதால். ஓர் இந்துவாக தங்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்தல் வேண்டும்.
- சைவ சமயத்திற்கு முக்கியத்துவம் அளித்து இந்து மதத்தைப்பற்றிய அறிவுடன் குறைந்த பட்சம் மூன்று வருட பயிற்சி மற்றும் இதனை ஒத்த சேவையில் அனுபவம் அவசியம் .
- கோயில் சடங்குகள், ஹோமம் மற்றும் திருமண சமய ஆசீர்வாதங்களை திட்டமிடுதல், செயற்படுத்துவதில் பங்கேற்ற அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.
- ஆலயம் தொடர்பான ஊழியர்களுடனும் நிர்வாகத்துடனும், கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களுடனும் திறம்படத்தக்க நல் அணுகுமுறையினைப் பேணத்தக்கவராக இருத்தல் வேண்டும்.
- சமய தலைப்புகளில் பக்தர்களிடம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உரையாற்றும் திறன் கொண்டிருக்க வேண்டும்.

**விண்ணப்பதாரர்கள் (குருக்கள்) இந்த வேலையை மனதார, கடவுளுக்கு செய்யும். சேவையாகக் கருதுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.**

**விண்ணப்பங்களை அஞ்சல் தபால் அல்லது மின்னஞ்சலில் அனுப்பவும்.**
Chairman Highgatehill Murugan Temple,
200A, Archway London N65BA
Email: knrajah@hotmail.co.uk T.P: +447958554057

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல், அஆ
இழந்தான்என் றெண்ணப் படும்.

— நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 மாசி 4 ஞாயிற்றுக்கிழமை (16.02.2025) சிகரம் :130




○ நிலாந்தன்

# கிளீன் தையிட்டி ?

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள திண்ணை விருந்தினர் விடுதியில் இலங்கைக்கான ஐ.நா.அலுவலகம் ஒரு விருந்துபசாரத்தை ஒழுங்குபடுத்தியிருந்தது.இலங்கையில் ஐ.நா.வின் பிரசன்னம் 70 ஆண்டுகளைப் பூர்த்திசெய்கின்றது. இந்த 70ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் விதமாக அந்த விருந்துபசாரம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் உட்பட ஐ.நா.வின் கட்டமைப்புகளுக்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரிகளும் அந்த அலுவலகங்களில் வேலை செய்யும் உள்ளூர் அலுவலர்களும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

மேலும் கட்சித்தலைவர்கள் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்,குடிமக்கள்சமூகங்களைச் சேர்ந்தவர்கள், அரச அதிகாரிகள் என்று பலவகைப்பட்டவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்த நிகழ்வில் பேசிய இலங்கைக்கான ஐ.நா.வின் வதிவிட ஒருங்கிணைப்பாளர்,சிவில் சமூகங்களை அரசியல் கட்சிகளும் அரசாங்கமும் எதிர்நிலையில் வைத்துப் பார்க்கக்கூடாது என்று பேசினார்.

இலங்கைத் தீவில் ஐ.நா.வின் பிரசன்னம் 70 ஆண்டுகள்.ஆனால் இலங்கைத் தீவில் இனப்பிரச்சினை 70ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. தமிழ் மக்கள் ஐ.நா.வுடன் நெருக்கமாக வேலைசெய்யத் தொடங்கியது 2009க்குப் பின்னிருந்து.அதாவது 15 ஆண்டுகள். அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு நிலைமாறு கால நீதியை இலங்கைத் தீவில் ஸ்தாபிப்பதற்காக உழைத்தது கடந்த 9ஆண்டுகள்.இப்படிப் பார்த்தால் இலங்கைத் தீவில் ஐ.நா.வின் 70ஆண்டுகால பிரசன்னத்தால் இனப்பிரச்சனையைத் தீர்க்கமுடியவில்லை.குறிப்பாக 2009க்குப் பின்னரான கடந்த 15ஆண்டுகாலத் தமிழ் அரசியல் எனப்படுவது அதிகபட்சம் ஐ.நா. மைய அரசியலாகவே இருந்துவருகிறது.அதிலும் குறிப்பாக 2015,செப்ரெம்பர் மாதம் இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையோடு நிறைவேற்றப்பட்ட நிலைமாறுகால நீதிக்கான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்குப் பின்னிருந்து தமிழ்க்கட்சிகளில் ஒரு பகுதியும் சிவில் சமூகங்களும் மனித உரிமைக் காவலர்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் நிலைமாறுகால நீதிக்காக அதாவது போரில் ஈடுபட்ட தரப்புகளைப் பொறுப்புக்கூற வைப்பதற்காக உழைத்துவருகின்றன. ஆனால் அவ்வாறு உழைத்ததன் விளைவாக தமிழ் மக்கள் பெற்றவை என்ன?

கடந்த 2021ஆம் ஆண்டு மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுதுவதற்காக சிவில் சமூகங்கள் கட்சிகளை ஒருங்கிணைத்தன. அதற்குரிய இரண்டாவது சந்திப்பு வவுனியாவில் இடம் பெற்றது. இச்சந்தப்பின்போது அதில் பங்குபற்றிய சுமந்திரன் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.“ 6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனையைச் செய்தோம்,அதில் தோல்வியடைந்து விட்டோம்.” ஆறாண்டு காலப் பரிசோதனை என்பது என்ன?அதுதான் 2015ஆம் ஆண்டிலிருந்து நிலைமாறு கால நீதிக்காக உழைத்தமை. நிலைமாறு கால நீதியைப் பொறுத்தவரை கூட்டமைப்பு அதன் பங்காளியாகச் செயற்பட்டது.புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்பில் உள்ள அமைப்புகளும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் நிலைமாறுகால நீதி வேண்டாம், இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதிதான் வேண்டும் என்று கோரிய ஓர் அரசியல் சூழலில், கூட்டமைப்பு நிலைமாறு கால நீதியின் பக்கம் நின்றது.ஆனால் அந்தப் பரிசோதனையில் தாங்கள் தோல்வியடைந்துவிட்டதாக சுமந்திரன்அவர்தான் நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளில் தமிழ்த்தரப்பின் பிரதான பங்காளிஅவ்வாறு கூறினார். நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகள் இலங்கைத் தீவில் எதிர்மறை விளைவுகளைத்தான் தந்தன.ஆங்கிலத்தில் அதனை "கவுண்டர் ப்ரொடக்டிவ்"என்று கூறுவார்கள்.

அதாவது நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகள் இலங்கைத் தீவில் தோல்வியடைந்துவிட்டன.அதற்குப் பின்னரும் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் கழிந்துவிட்டன.ஐ.நா.வை நோக்கிய தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் பெரும்பாலும் நிறைவேற்றப்படவில்லை.2021 ஆம் ஆண்டு தமிழ்க் கட்சிகள் ஐ.நா.வுக்கு எழுதிய கூட்டுக் கடிதத்தில் ஒரு சான்றுகளைத் திரட்டும் பொறிமுறையைக் கேட்டிருந்தார்கள்.குறிப்பாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியானது அந்தப் பொறிமுறையானது குறுகிய காலத்துக்குள் சாட்சியங்களைச் சேகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. ஆனால் அந்தக் கடிதத்திற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஐ.நா.வின் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான பொறிமுறையானது மிகப் பலவீனமானதாகவே அமைந்தன.அது ஐ.நா . மனித உரிமைகள் பேரவைக்குள் இயங்கும் ஓர் அலுவலகமாகச் சுருக்கப்பட்டுவிட்டது.இதுதான் கடந்த 15 ஆண்டுகால ஐ.நா. மையத் தமிழ் அரசியலின் தொகுக்கப்பட்ட விளைவு. இப்படிப்பட்டதோர் பூகோள அரசியற் சூழலில்,திண்ணையில் நடந்த விருந்துபசாரத்துக்கு முதல் நாள் மாலை அதே திண்ணையில் ஒரு சந்திப்பு இடம் பெற்றது. ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் ஐ.நா.வின் வெவ்வேறு அலகுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளும் கலந்து கொண்ட மேற்படி சந்திப்பில்,தமிழ்மக்கள் மத்தியில் உள்ள குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள்.சந்திப்பில் நிலைமாறு கால நீதியின் தோல்வி குறித்து ஆழமாகப் பேசப்பட்டது.அந்தச் சந்திப்பின் முடிவில் இலங்கைக்குரிய ஐ.நா.வதிவிட ஒருங்கிணைப்பாளரான மார்க் அன்ட்ரே பிரான்ச்சே எல்லாவற்றையும் தொகுத்துப் பதில் சொன்னார்.

அவர் பழக இனிமையானவர்;எளிமையானவர்;வெளிப்படையான ஒரு ராஜதந்திரி. கதைப்போக்கில் சில விடயங்களை நறுக்கென்று சொல்லிவிட்டு போகக்கூடியவர். அவர் தனது தொகுப்புரையில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பின் அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகப் போவதாகத் தெரிகிறது.இலங்கைக்கு எதிரான ஐ.நா.தீர்மானங்களில் அமெரிக்கா பிரதான உந்துசக்தியாக இருந்து வந்திருக்கிறது. இந்நிலையில் இனி வரக்கூடிய ஐ.நா. தீர்மானங்களை இலங்கை அரசாங்கமும் ஐ.நா.வும் இணைந்து நிறைவேற்றக்கூடிய தீர்மானங்களாக இருப்பதற்கான வாய்ப்புகள் குறையக்கூடும். மேலும் இப்பொழுது நடைமுறையில் உள்ள சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகத்தின் செயற்பாடுகளையும் அது பாதிக்கக்கூடும் என்ற பொருள் கொள்ளத்தக்க விதத்தில் அவரது உரை அமைந்திருந்தது.

அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலக நேர்ந்தாலும் சுவிட்சர்லாந்து அந்தப் பாத்திரத்தை வகிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.


காசா, உக்ரைன் அழிவுகளின் பின்னணியில், பொதுவாகவே இலங்கைமீதான அதாவதுதமிழர்விவகாரத்தின் மீதான ஐ.நா.வின் கவனக்குவிப்பு குறையக்கூடிய வாய்ப்புகள் அதிகம். இவை மட்டுமல்ல உலகத்தின் கவனத்தையும் ஐ.நா.வின் கவனத்தையும் ஏன் கொழும்பின் கவனத்தையும்கூட ஈர்க்கக்கூடிய விதத்தில் தமிழ் அரசியல் தொடர்ச்சியாக நொதிக்கும் ஒன்றதாக, கொந்தளிப்பானதாக இல்லை என்பதும் ஒரு காரணந் தான்.இதை இன்னும் கூரான வார்த்தைகளில் சொன்னால்,தமது அரசியலை கொந்தளிப்பான

05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
16 பெப்ரவரி 2025



# மெல்ல யாழ். இனிச் சாகும்?

ராம் சேனா

புவிச்சரித வரலாற்றுக் காலத்தில் ஏறத்தாழ இருபத்தைந்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நிலவியதாகக் கருதப்படுகின்ற மயோசீன் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு கடல் பகுதியிலிருந்து மேலுயர்த்தப்பட்டதாக புவிச்சரிதவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். கடல் பகுதியினுள் படிவான பல்வேறு அடையல்களும் ஆழமற்ற பகுதிகளிலிருந்த உயிரினங்களும், சேதனவுறுப்புகளும், மேலுயர்த்துகையின் பின் கரைசல்பட்டு இறுகிச் சுண்ணாம்புக்கற்களாயின. இவ்வாறு தோன்றிய சுண்ணாம்புக் கற்பாறை குடாநாட்டின் வெவ்வேறு பகுதிகளிலில் வேறுபட்ட தன்மையுடையதாகவும், வெவ்வேறு ஆழத்திலிலும் காணப்படுகின்றது. இதுவரை குடாநாட்டின் பல பகுதிகளின் மேற்பரப்பிலும், ஆராய்ச்சிக்காக இடப்பட்ட துளைகளின் மூலமும், குழாய்க்கிணறுகளை அமைப்பதற்குத் துளையிடப்பட்டபோதும் பெறப்பட்ட மாதிரிகளை அடிப்படையாகக்கொண்டு இங்கு காணப்படுகின்ற சுண்ணாம்புக் கற்பாறையினை முருகைக் கற்பாறைத் தன்மைகொண்ட சுண்ணாம்புக் கற்பாறை, மக்கித் தன்மையுடைய உலர்ந்த சுண்ணாம்புக் கற்பாறை, மணல் தன்மை கூடிய வைரச் சுண்ணாம்புக் கற்பாறை என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்.

குடாநாட்டின் வடபகுதியில் சுண்ணாம்புக் கற்பாறைகள் உயர்த்தப்பட்ட நிலையிலும் தெற்காகவும், தென்மேற்காகவும் சாய்ந்து காணப்படுகின்றன. இப்பாறைகள் குடாநாட்டின் சில பாகங்களில் ஏறத்தாழ 350 அடி தொடக்கம் 450 அடி ஆழம்வரை அமைந்துள்ளதாக அறியமுடிகின்றது. இவை தோன்றிய முறையில் வெவ்வேறு அடையல்களாகவும், இதில் அமைந்துள்ள உயிரின சேதனவுறுப்புக்களின் காரணமாக இடத்துக்கிடம் வேறுபட்ட சேர்க்கையினால் வேறுபட்ட அளவில் நுண்துளைமையைக் கொண்டுள்ளவையாகவும், அதற்கேற்ப நீரை உட்புகவிடக்கூடிய தன்மையுடையனவாகவும் இருக்கின்றன. அத்துடன் நீரில் கரையும் தன்மையைக் கொண்டிருப்பதனால், குடாநாட்டின் மேற்பரப்பின்கீழ் இப்பாறைகள் கரைந்து, மூட்டுகளும், வெடிப்புகளும், பிளவுகளும் தோன்றியுள்ளன. அத்துடன் நீர்தேங்கி நிற்கக்கூடிய குகைளையும், இடைவெளிகளையும் கொண்டமைந்துள்ளன. ஊடுபுகவிடக்கூடிய சுண்ணாம்புக் கற்பாறையினூடாக நீர் கீழ்நோக்கிக் கசிந்து, இத்தகைய இடைவெளிகளினூடே தேங்கி, நீர்கொள் படுக்கையாக அமைந்துள்ளன. கிட்டத்தட்ட ஒரு தேன்கூட்டைப் போன்றே யாழ்ப்பாணத்தின் நிலக்கீழ்ப்பாகம் அமைந்திருக்கின்றது. அத்தகைய தேன்கூடு முழுவதும் நீர் நிரம்பியிருக்கிறது. சுண்ணாம்புக்கற்கள் அந்தத் தேன்கூடாகிய நீர்க்கூட்டைத் தாங்கிவைத்திருக்கின்றன. இந்தக்கூடுகள் ஒன்றோடொன்று மிக நீண்ட தொடர்புடையவை. இதனால்தான் கீரிமலையில் போடப்படும் தேசிக்காய் தொண்டைமானாற்றில் மிதக்கிறது என்ற ஐதீகங்கள் நம்மிடையே இன்னும் உலவுகின்றன. அந்தளவிற்கு விரைவான நீரோட்டத்தையும் இயற்கையான முறையில் இந்தச் சுண்ணக்கற்கள் நிகழ்த்திக்கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாண நிலத்திற்கு இயற்கை அளித்த பெருங்கொடைதான் இந்தச் சுண்ணக்கற்கள். இந்தச் சுண்ணக்கற்கள் இல்லாவிடின், அல்லது, அதன் நிலக்கீழ்த் தளக்கோளத்தில் சிதைவு ஏற்பட்டால் விரைவாகவே கடல் நீர் உள்நுழைந்துவிடும். இதனால் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீருக்கு உப்புத்தன்மை ஏற்படுவதுடன், நிலத்தின் மேற்படையும் உவர்த்தன்மையாகிவிடும். எனவேதான் யாழ்ப்பாணத்தின் உயிர்க்கோளம் நிலைத்திருக்கவேண்டுமாயின் சுண்ணாம்புக்கற்களின் இருப்பு மிக அவசியம் என்கிற விடயம் வலியுறுத்தப்படுகின்றது.

ஆனால், யாழ்ப்பாணத்தின் களநிலைமையோ வேறானதாக இருக்கின்றது. பெரு வணிக மாபியாக்கள், கல்லுடைக்கும் ஆலைகளின் உரிமையாளர்கள், கனிமவள வியாபாரிகள் யாழ்ப்பாணத்தின் உயிர்மூச்சையே விற்றுப் பணமாக்குவதற்குத் தம்மால் என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதனையெல்லாம் செய்கின்றனர். அதற்காக அவர்கள் செய்யும் திருக்கூத்துக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. சுண்ணக்கல் வளமுள்ள காணிகளை விலைக்கு வாங்கி, அந்தக் காணியில் எவ்வளவு ஆழத்திற்கு சுண்ணக்கற்படைகள் உள்ளனவோ அதனை அகழ்ந்து விற்பனை செய்வது.
2. தம் காணிகளை விட்டு புலம்பெயர்ந்திருக்கின்றவர்களின் காணிகளை அடையாளம் கண்டு, அந்தக் காணிகளில் எவ்வித அனுமதியுமின்றி சுண்ணக்கல் அகழ்வது.
3. விவசாயிகளைத் தொடர்புகொண்டு, சுண்ணக்கல் அகழ்வேண்டிய காணிகளைத் தமக்குத் தந்தால் தாம் இலவசமாக அந்தச் சுண்ணக்கற்களை அகழ்ந்து காணியைப் பண்படுத்தித் தருவதாகவும் கூறி, அங்கே தம் கைவரிசையைக் காட்டுவது.

விவசாய நடவடிக்கைகளுக்காக இரண்டரை அடி வரை சுண்ணக்கற்களை அகழலாம் என்பதற்கு அனுமதியுள்ளபோதிலும், வியாபாரிகள் பெருங்குழிகளை ஏற்படுத்தி அகழ்வுசெய்கின்ற விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

4. அண்மை நாள்களாக வீதிகள், பொது இடங்கள் போன்றவற்றில் படிந்திருக்கின்ற சுண்ணக்கற்களை இரவோடிரவாக அகழும் நடவடிக்கைகளும் இடம்பெற்றுவருகின்றன.
5. இவ்வாறு அகழப்படும் சுண்ணாம்புக்கற்களை முழுமையாக வீதியில் வாகனங்களில் எடுத்துச்செல்லமுடியாது. எனவே அதனை அயலில் உள்ள ஆலைகளுக்கு அனுப்பி, அங்கு சல்லியாக அல்லது மாவாக மாற்றி, திருகோணமலை சிமெந்துத் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லுகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில், யாழ்ப்பாணத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்றுவரும் சுண்ணக்கல் அகழ்விற்கு சுற்றுச்சூழல் சார்ந்தவர்களும், மக்களும் நீண்டகாலமாகவே குரல்கொடுத்துவருகின்றனர். சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திவருகின்றனர். ஆனால் உரியதரப்பினர் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்களில் கலந்துகொள்ளும் அரசியல்வாதிகளுக்கு மக்கள் கொடுத்த நெருக்குவாரங்களின் காரணமாக, வேறுவழியே இல்லாமல் அவர்கள் சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வை நிறுத்துவதற்கான தீர்மானங்களை நிறைவேற்றிய போதிலும், அவை நடைமுறைக்கு வந்ததில்லை.

தற்போது ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சாவகச்சேரி, வேம்பிராய் மக்கள் பலமுறை முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். மக்களின் முறைப்பாட்டுக்கு அமைவாக, நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் சுண்ணக்கற்கள் அகழப்பட்ட இடங்களை அண்மையில் சென்று பார்வையிட்டார். அவர் அவ்விடங்களைச் சென்று பார்வையிட்டபோதும், எதுவித நடவடிக்கைகளும் எடுக்கமுடியாதவராக இருந்தார். எனவேதான் கொதிப்படைந்த பாதிக்கப்பட்ட மக்கள் தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்களை முன்னெடுத்தனர். மாற்றத்தை ஏற்படுத்துவார்கள், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்காகக் குரல்கொடுப்பார்கள் என நம்பி வாக்களித்த தேசிய மக்கள் சக்திகூட இந்த விடயத்தில் தம் பக்கம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டினர். விடயம் இளங்குமரனின் காதுக்குப் போகவே, வேறு வழியே இல்லாமல் களத்தில் குதித்தார் அவர். நுணாவில் பகுதியில் சல்லியாக்கப்பட்ட சுண்ணக்கற்களை (கண்டக்கல் அல்லது வெள்ளைச்சல்லி என்கின்றனர்) ஏற்றிப் பயணித்துக்கொண்டிருந்த வணிகக் குழுமம் ஒன்றுக்குரிய கனரக வாகனமொன்றை வழிமறித்து, அதனைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தார் அவர்.

ஆனால் மறுநாளே பொலிஸ் நிலையத்தை நாடியது அந்த வணிக நிலையம். முறைப்பாட்டின் பின்னர் ஊடகங்களைச் சந்தித்த குறித்த வணிக நிலையத்தின் உரிமையாளர், 68 வருட பாரம்பரியமுடைய தமது வணிக நிறுவனத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக சமூக வலைதளத்தில் கருத்தினைப் பதிவிட்டமைக்கு எதிராகவே நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனுக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளதாகவும், வெள்ளைச்சல்லி எடுத்துச்செல்வதற்கு வாகன அனுமதி பெறத்தேவையில்லை எனவும், கடந்த காலத்தில் இந்த விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எதனையும் அறிந்திராத நாடாளுமன்ற உறுப்பினர் அவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

குறித்த வணிக உரிமையாளர் குறிப்பிட்ட வெள்ளைச்சல்லிக்கு வாகன அனுமதி பெறத்தேவையில்லை என்கிற விடயம்கூட தவறானது என்பதை உறுதிப்படுத்தும், கனிமவளத் திணைக்களத்தின் கடிதம் ஒன்றினையும் சமூக வலைதளங்களில் பகிர்ந்திருந்தனர். இதனையடுத்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட யாழ்ப்பாணப் பொலிஸார், குறித்த சுண்ணாம்புக்கல் அகழ்வு விடயம் தம்மோடு சம்பந்தப்பட்டதல்ல எனவும், கனிமவளத் திணைக்கள அதிகாரிகளே அதற்குப் பொறுப்பானவர்கள் எனவும், அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே தமது எதிர்கால நடவடிக்கைகள் அமையும் எனவும் தெரிவித்தனர்.


இப்படியாகப் பொறுப்புச் சொல்லவேண்டிய, நடவடிக்கை எடுக்கவேண்டிய அனைத்துத் தரப்பினரும், ஆளையாள் விரல்சுட்டிக்காட்டி விலகிக்கொண்டிருக்க, கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், இந்த விடயத்தில் யாழ். மாவட்ட அரச அதிபரும், பிரதேச செயலாளரும் பதில் தரவேண்டும் எனக் குறிப்பிட்டு நழுவிவிட்டார். இதே சந்திரசேகரன்தான் , ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்விற்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொண்டு, தாம் பொன்னாவெளியிலிருந்து ஒரு துண்டு சுண்ணக்கல்லைக்கூட எடுத்துச்செல்ல அனுமதிக்கமாட்டோம் எனத் தெரிவித்திருந்தார்.

வணிக மாபியாக்களிடம் சிக்கிச் சின்னா பின்னமாகிக்கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தாம் பொறுப்புச் சொல்லவேண்டிய அனைத்து விடயங்களையும் அரச அதிகாரிகளின் தலையில் கட்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் போக்கு அண்மைக்காலமாக அதிகரித்திருக்கின்றது. அப்படியானதொரு நிலையெடுப்பையே யாழ்ப்பாணத்தில் அகழப்படும் சுண்ணக்கல் விடயத்திலும் தேசிய மக்கள் சக்தி எடுத்திருக்கிறது என்பதற்கு கடற்றொழில் அமைச்சரின் கூற்றுத் தகுந்த சான்றாகும்.

சுற்றுச்சூழலை காப்பாற்றவேண்டிய இடத்தில் இருக்கின்ற துறைசார் அரச அதிகாரிகள் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதில்லை. எனவே பொதுமக்கள் குறிப்பிடுவது போல, இந்த அரச அதிகாரிகள் சம்பந்தப்பட்ட வணிக நிறுவனங்களிடம் கையூட்டைப் பெற்றுக்கொண்டு அமைதிகாக்கின்றனர் என்பதில் உண்மையிருப்பது உறுதியாகின்றது. அதேபோல நாட்டில் தமிழ் மக்கள் எங்கே போகின்றனர், யாரோடு தொடர்பு வைத்திருக்கின்றனர் என்பதைக் கவனிப்பதிலேயே தம் முழுக்கவனத்தையும் வைத்திருக்கின்ற புலனாய்வுத் துறையினர், இராணுவத்தினர், பொலிஸார் இந்தச் சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வு விடயத்தில் கடுகளவு கரிசனையும் காட்டுவதில்லை. கவனிப்பதுமில்லை.

தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் நிலைமையோ சொல்லவே தேவையில்லை. தமிழ் மக்களுக்கும், தமிழர் நிலத்திற்கும் ஆபத்து நேரும்போது முதலில் களத்தில் நிற்கவேண்டியதும், குரல்கொடுக்கவேண்டியதும் தமிழ்த்தேசியக் கட்சிகள்தான். சுண்ணக்கல் அகழ்வென்பது தமிழர்கள் செறிந்துவாழும் யாழ்ப்பாண நிலத்தையே பாழாக்கும் நடவடிக்கை. எனவே தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள்தான் இந்த விடயத்தில் முதலில் களத்தில் இறங்கியிருக்கவேண்டும், தடுத்து நிறுத்தப் போராடியிருக்கவேண்டும். ஆனால் இவ்வளவு பிரச்சினைகள் நடந்துள்ளபோதிலும், எந்தவொரு தமிழ்த்தேசிய அரசியல்கட்சிகளும் இதுவரையில் ஒரு துண்டுப்பிரசுரம் கூட வெளியிடவில்லை. எனவேதான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசிய அரசியல்கட்சிகளை தமிழ் மக்கள் நிராகரித்தமையே சரியென்றாகிறது.

போர் முடிவுற்ற காலத்திலிருந்தே யாழ்ப்பாணத்தின் கனிமவளங்களான மணல், சுண்ணாம்புக்கற்கள் போன்றன சட்டவிரோதமான முறையில் அகழப்பட்டுத் தெற்கிற்கு கொண்டுசெல்லப்படுகின்றன. சட்டவிரோதமான முறையில் வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்தும், பூநகரியின் கௌதாரிமுனையிலிருந்தும் மணல் ஏற்றிச்செல்லப்படுகின்றது என்கிற குற்றச்சாட்டுகள் இன்றும் குறைந்தபாடில்லை. மக்கள் இன்றும்கூட இந்த சட்டவிரோத மணல் அகழ்விற்கு எதிராகப் போராட்டங்களை நடத்திவருகின்றனர். சட்டவிரோத கனிமவள அகழ்வுக்கு எதிரான பொலிஸ் முறைப்பாடுகள், திணைக்களங்கள் ரீதியான நடவடிக்கைகள், நீதிமன்ற வழக்குகள், பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்கள் என எதனாலும் இந்தச் சட்டவிரோத கனிமவள கடத்தல்காரர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அப்படியாயின் இதற்குப் பின்னால் மிகப் பலமானதொரு தரப்பு உள்ளதென்றுதானே அர்த்தம். அந்தத் தரப்பினரின் அழுத்தம்தான் பலரையும் மௌனிக்கச் செய்திருக்கிறது. இந்த விடயத்தை கண்டுங்காணாமல் கடந்துபோகச் செய்திருக்கிறது. இந்த நிலமை நீடிக்கத்தான் போகிறது. யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர்வளமும், இயற்கை யாழ்ப்பாணத்திற்கு அளித்த அருங்கொடையும் அழிக்கப்படத்தான் போகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி



விசும்பின் துளி வீழின் அல்லால்...




## புலமையாளர் பதில்



**கேள்வி:** குழாய்க்கிணறு தோண்டுவது தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகள் பற்றி விபரிப்பீர்களா?

(இ.அனுசன், கொக்குவில்)

**பதில்:** இலங்கையில் குழாய்க்கிணறு தோண்டுதல் தொடர்பிலான ஒழுங்கு விதிகள் முதன்மையாக நீர்வளச் சபைகள் சட்டத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது. அதிகரித்து வரும் நிலத்தடிநீர்ப் பயன்பாட்டை நிர்வகிக்க, நிலையான பிரித்தெடுக்கும் நடைமுறைகளை உறுதிசெய்வதற்காக அரசாங்கம் குறிப்பிட்ட கட்டுப்பாடுகளை செயற்படுத்தியுள்ளது.

மார்ச் 16, 2017 எனத் திகதியிட்ட 2010/23 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகளின் படி குழாய்க்கிணறு தோண்டும் செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் நீர்வளச் சபையில் தம்மைப் பதிவுசெய்ய வேண்டும். நிலத்தைத் துளையிடும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு முன் தேவையான ஒப்புதல்களைப் பெறுவது உட்பட, துளையிடும் நபர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை இந்த ஒழுங்குவிதிகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இவற்றிற்கு இணங்கத் தவறினால் அபராதம் விதிக்கப்படலாம். அவை பின்பற்றப்படுவதைச் செயற்படுத்த அதிகரிக்கப்பட்டுள்ளன.

குழாய்க்கிணறு கட்டுமாணத்திற்கான வழிகாட்டுதல்களையும் நீர்வளச்சபை நிறுவியுள்ளது. துளையிடும் செயற்பாட்டின்போது பின்பற்றவேண்டிய படிமுறைகளை விபரிக்கின்றது. குழாய்க் கிணறுகள் பாதுகாப்பானதாகவும் நிலையானதாகவும் கட்டப்படுவதை உறுதிசெய்வதற்கும், சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைப்பதற்கும், நிலத்தடிநீர் வளங்களைப் பாதுகாப்பதற்கும் இவ் வழிகாட்டுதல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்திற்கும், இந்த தேசிய ஒழுங்குவிதிகள் பொருந்தும். அத்துடன் , வட மாகாணசபையின் அதிகார எல்லைக்குள் குழாய்க்கிணறு தோண்டுதல் தொடர்பாகக் கூடுதல் கட்டுப்பாடுகள் அல்லது தேவைப்பாடுகளை விதிக்கக்கூடிய நியதிச்சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாகாணசபைக்குள்ளது. அவை தொடர்பில் அறிந்துகொள்ள வடமாகாண சபையை அணுகுதல் பொருத்தமானதாகவிருக்கும். இந்த விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் மூலம் குழாய்க்கிணறு தோண்டும் பணியைப் பொறுப்புடன் மேற்கொள்ளமுடியும். இது வடக்கு மாகாணத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதும் நிலத்தடிநீர் வளங்களின் நிலைபேறான இருப்பை உறுதிசெய்கின்றது.

**எம்.எஸ்.எம் ஹிதாயத்துல்லா**
புவிச்சரித நீரியலாளர்,
நீர் வளச்சபை



## இளையோர் பார்வை



## சேமிப்போம்...!

சேமிப்போம் மழைநீரை நாம்
நிலவளம் காப்போமே!
மழையால் ஆவதே உலகு அதற்கென
மரம் நாட்டிப் பழகு!
உழவுக்கு உதவுமே அது
நிலத்தடிநீர் பெருக்குமே!
வான் தருகிறது மழை
அதை வீணாக்குவது நம் பிழை
காலத்தே வரும் மழையை சேமித்து
ஞாலத்தை ஒன்றாய்க் காப்போமே!

S.கிதுர்சன், தரம் 6
திருநெல்வேலி.

## கடந்த மாத அமர்வு:

# துளங்களைப் புனரமைத்தல் நடைமுறையில் சாத்தியமா?

வடமாகாண இளம் நீர்வளவாண்மையாளர்களின் கடந்த மாத அமர்வு குளங்களின் புனரமைப்பு, அவற்றை ஆழப்படுத்துதல், எம் பிரதேசங்களில் உள்ள குளங்களின் தற்போதைய நிலைமைகள் என்பன தொடர்பாக ,பல்வேறு தரப்பினரின் பங்கேற்புடன் நடைபெற்றது. இதில் குளங்களினை ஆழப்படுத்துதல் நடைமுறைச் சாத்தியமா? அதன் பொறுப்புத்துறப்பை ஏற்பவர் யார்? நடைமுறைச்சிக்கல்கள் யாவை? மேலும் நகரப்புற மற்றும் கிராமியக் குளங்களின் புனரமைப்பின் தேவைப்பாடு என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அது மட்டுமன்றி அவ்வமர்வில் வடமாகாணத்தின் நீரியல் வட்டத்தைக் கருத்திற்கொண்டு குளங்களை ஆழப்படுத்துதல் எவ்வகையில் சாதகமான அடைவினை ஏற்படுத்தும் என்பதும் தெளிவுபடுத்தப்பட்டது. அவ்வகையில் zoom செயலியூடாக இணைந்த பங்கேற்பாளர்களை இரு குழுக்களாகப் பிரித்து குழுச்செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டது.

அதன் முடிவில் நகரப்புறக் குளமொன்றும், கிராமியக்குளமொன்றும் புனரமைக்கப்படுவதன் சாத்தியப்பாடு பற்றி குழுக்கள் கலந்துரையாடின. மேலும் முன்மொழியப்பட்ட குளங்களைப் புனரமைத்தல் மற்றும் அவற்றின்பராமரிப்பின் நிலைபேறான தன்மை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அதாவது குளங்களை தனியொரு நபர் அல்லது குழுவொன்று புனரமைப்பதை விட அக்குளங்கள் சார்ந்த சமூகத்தின் பங்களிப்புடனும் ஆதரவுடனும் அவை புனரமைக்கப்பட வேண்டியது அவசியமென அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொழில்நுட்ப உதவியுடன் குளங்களை ஆழப்படுத்துதல் , சமூகத்தின் தேவைப்பாட்டினை அடிப்படையாகக்கொண்டு குளத்தைப் புனரமைத்தல் சிறந்தது என வெளிப்படுத்தப்பட்டது.

அடையாளப்படுத்தப்பட்ட குளங்களுக்கு இளம் நீர் வாண்மையாளர்கள் களவிஜயத்தை மேற்கொண்டு ஆராய்ந்த பின்னர் புனரமைப்புத் தொடர்பிலான இறுதி முடிவு எட்டப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. எங்கள் அயலில் உள்ள குளங்களை நாம் அறிவதோடு மாத்திரமல்லாமல் அவற்றின் முக்கியத்து வத்தையும் உணரத் தலைப்படவேண்டும். அப்போதுதான் அவற்றைப் புனரமைத்து நிலைபேறான வகையில் பராமரித்து எமது பிராந்தியத்தின் நீரியல் வட்டத்தைச் சீராக்க எம்மால் இயலும். முயன்றுதான் பார்ப்போமே?



**உலக நீர் தினத்தை முன்னிட்டு மார்ச் 22ம் திகதி துளியின் விசேட பதிப்பு உதயனில் பிரசுரமாகும்.**

*எதிர்வரும் மார்ச் மாதம் 16 ஆம் திகதி துளியின் 12 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடிவரும். வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப் பெண்பாற் கவிஞர்களின் பார்வையில் தமிழர் பண்பாடும் வாழ்வியலும் – ஓர் நோக்கு

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தமிழர் வாழ்வியலில் அறம் விஞ்சி நின்றமையால் அல்லது அறமே வாழ்க்கையானதால் குடும்ப வாழ்க்கையை முன்னோர் 'இல்லறம்' என அழைத்தனர். தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து ஏற்படுத்திக்கொள்ளுகின்ற பந்தபாசத்தின் விளைவாக ஏற்படுகின்ற அந்நியோன்னியமான வாழ்க்கையே இல்லறம் என்பர். சங்ககாலப் படைப்புகளில் இல்லறம், வாழ்க்கை என்பன பற்றி புறநானூறு, கலித்தொகை, பதிற்றுப் பத்து, அகநானூறு போன்றவற்றில் தெளிவாகச் சித்த ரிக்கப்பட்டுள்ளன. அதேபோல் சங்கமருவிய காலத்தின் படைப்புகளில் ஒன்றான திருக்குறளில் திருவள்ளுவர் இல்லறத்தினைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை**


*(திருக்குறள் 41)*

இல்லறத்தில் நின்று வாழ்பவன் என்பவன் அறத்தின்பால் ஒழுகி வாழ்க்கையில் கடைபிடிக்கப்பட வேண்டிய ஒழுக்கங்களினைக் கடைப்பிடித்து வாழ்கின்ற வாழ்க்கையைக் குறிக்கும். குடும்பம் என்பது பெண்ணை முதன்மையாகக் கொண்ட ஒரு சமூகநிறுவனம் ஆகும். பெண்ணின் தூய உடல் இன்றி சமூக அமைப்பினைக் கட்டிக்காப்பாற்ற முடியாது. சங்க இலக்கியங்களில் குடும்பம் என்ற பதம் பிரயோகத்தில் இல்லை. அதற்குப் பதிலாக குடி, இல்லம், இல், மனை என்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டன. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக அமைப்பே குடும்ப நிலைகளில் காணப்பட்டது. ஏன் சங்க இலக்கியங்களில்கூட பெண்களின் வகிபாகமானது முதன்மை பெற்றதாய் இருக்கிறது. இல்லறத்தின் சிறப்புக்கும், பெருமைக்கும் விருந்தோம்பல் அடிப்படையானதாக அமைகின்றது.

**விருந்தோம்பல்**

இல்லறத்தில் மிகமுக்கியமான பண்புகளில் ஒன்றாக விருந்தோம்பல் அமைந்துள்ளது. விருந்தோம்பல் என்பது விருந்தினர்களையும் புதியவர்களையும் இன்முகத்துடன் வரவேற்று அவர்களுடன் நட்பு ரீதியாகப் பழகி அவர்களுடைய தேவைகளினை உணர்ந்தும் அறிந்தும் நிறைவேற்றிக்கொள்வதைக் குறிக்கும். தமிழர்களின் பண்பாட்டம்சங்களில் மிக உயரியதும், மனிதவாழ்வோடு இணைந்ததும், இசைந்ததுமாக விருந்தோம்பல் காணப்படுகின்றது. விருந்தோம்பல் என்பது உணவு வழங்குகின்ற செயற்பாட்டை மாத்திரம் குறிப்பதாய் இல்லை. இது ஒரு பரந்த கலையின் வெளிப்பாடாகும். ஆதித் தமிழனின் வாழ்வியலின் உயிர்நாதமான விருந்தோம்பல் 18 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியினால் இன்று வணிக ரீதியாக இலாபத்தினை உழைக்கத்தக்க ஒரு தொழிலாகவும் நோக்கப்படுகின்றது. சமகாலத்தில் டென்னில் மற்றும் ரெய்னொல்ட்ஸ் போன்ற அறிஞர்கள் விருந்தோம்பலினைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றனர்.

விருந்தினர்களையும், புதியவர்களையும் இன்முகத்துடனும், அன்புடனும் வரவேற்று அவர்கள் மீது அக்கறை காட்டி, தேவைகளினை அறிந்து அல்லது உணர்ந்து தேவைகளுக்கு ஏற்ப சேவையினை வழங்குகின்ற செயற்பாட்டையே விருந்தோம்பல் என்பர். முன்னர் இயம்பியபடி சங்ககாலத்தில் விருந்தோம்பலை ஒரு கலையாக எண்ணியே மன்னன் முதல் மக்கள்வரை விருந்தோம்பலுக்கு முன்னுரிமை வழங்கினர். அள்ளூர் நன்முல்லையார் என்ற பெண்பாற் புலவர் எழுதிய 306ஆவது புறநானூற்றுப் பாடலின் மூலம் போருக்குப் புறப்பட்டுச் சென்ற



கணவர் வெற்றிவாகையுடன் வீடு திரும்பி வரவேண்டும் என்றும், தொடர்ச்சியாக மனைநோக்கி விருந்தினர்கள் வரவேண்டும் என்றும் வேண்டி பெண்கள் நடுகல் வைத்து வழிபட்டனர். சங்ககாலத்தில் இறந்த முன்னோர்களினை வேண்டி நடுகல் வைத்து வழிபடும் வழமை இருந்தது. இப்பாடல் வழியே சங்ககாலத்தில் வாழ்ந்த பெண்கள், தத்தமது பூவும் பொட்டும் நிலைபெறப் போர்களம் சென்றவர்கள் பாதுகாப்புடன் வீடு திரும்பவேண்டும் என்று எண்ணினார்கள். அதுபோன்றே இல்லறம் செழித்து நல்லறம் பெருகிட விருந்தினர் வருகையையும் ஆவல் கொண்டு எதிர்பார்த்தனர். சமகாலத்தில் அறிவியல் ரீதியாக அணுகுகின்றபோது, சங்ககாலப் பெண்களின் இத்தகைய உணர்வுபூர்வமான செயற்பாட்டின் யதார்த்தம் எவ்வளவுதூரம் ஆழமாக உள்ளது என்பது வியப்பாகவுள்ளபோதும் விருந்தோம்பல் என்பது மிக முக்கியமான பணியாகப் பெண்டிர்களால் நோக்கப்பட்டது என்பது புலப்படுகின்றது. இதனை

***"நடுகல் கைதொழுவது பரவும் ஒடியாது;***
***விருந்து எதிர் பெறுகதில்யானே; என்னையும்"***

என்னும் (306: 45) புறநானூற்றுப் பாடல்களின் வரிகள் சான்றுபடுத்துகின்றன.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மன்னர்கள் குடியானவர்களின் நலன்கள் மீது அக்கறை உடையவர்களாகவும், அரண்மனை நாடிவருபவர்களின் கோரிக்கைகளைச் செவிசாய்த்து அவற்றுக்குத் தகுதியான தீர்வினை வழங்குபவர்களாகவும், அழிவுகள், இடர்கள், இயற்கை அனர்த்தங்கள் வரும் பொழுதெல்லாம் நெல்லும் பொருளும் கொடுத்து காலநேரவரையறை அற்று மக்களுக்காக ஈடுபடுபவர்களாகவும் இருந்தனர். இதற்கு அதியமான் நெடுமான் அஞ்சியின் வாழ்க்கை ஒரு சிறந்த உதாரணம். இக்கருத்துருவை ஔவையார் பாடாண்திணையில் அமைந்த ஒரு பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். பாடாண்திணை என்பது ஒருவரைப் புகழ்ந்து பாடுகின்ற பாடல்கள் ஆகும். இத்திணையில் அமைந்திருக்கும் இப்பாடலில் மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சி தன்னை எவ்வாறு உபசரித்தார் என்பதனை ஔவையார் மிகத் தத்துரூபமாகப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

(தொடரும்)

# உணர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

அம்மா செய்வினைப் பகுதியைத் தொண்டைமானாற்றில் கொண்டு போய்ப் போட வெளிக்கிட்ட அண்டுதான் கறுப்பு ஜூலை நினைவு நாள் வந்தது. அண்டைக்குப் பூரண ஹர்த்தால் எண்டு அறிவிச்சிருந்தவை. அதால போக்குவரத்து, கடைகண்ணியொண்டுமில்லை. எடுத்த காவடியை இறக்கக்கூடா தெண்டுட்டு அம்மா குலமக்கா வீட்டையோடிப்போய்க் குலமக்காவின்ர தமையன் துரைமாமாவைப் பிடிச்சா. அவரும் மறுப்பேதும் சொல்லாமல் தன்ர சைக்கிள் பின் கரியரில அம்மாவை ஏத்திக்கொண்டு வெளிக்கிட்டார். வெளிக்கிடேக்குள்ள மழைக்குணமாயிருந்திச்சுது. அந்த மூட்டத்தில மண்டான் றோட்டால சந்நதிக்குப் போகேக்குள்ளை றோட்டுக்கரை முழுக்க நுணா மரங்கள் வரிசைக்கு நிக்கும். ஒவ்வொரு மரத்திலயும் விடாமல் தூக்கணாங்குருவியள் கூடுகட்டியிருக்கும். வேறையொரு இடத்திலயுமந்தப் புதுமையைக் காணேலாது. தூக்கணாங்குருவியள் பொதுவாய் நுணா மரத்திலதான் கூடு கட்டுமாம். ' தூக்கணாங்குருவிக்கூடு.... 'எண்டொரு பி.சுசீலா பாடின பாட்டுமிருக்கு.

மற்றது சந்நிதிக்கு போறவழியிலதான் முந்தித் தொட்டாச் சிணுங்கியும் படர்ந்திருக்கும். நான் முதல்முதலா அம்மா, அப்பாவோட சந்நதிக்குப் போகேக்குள்ளதான் தொட்டாச் சிணுங்கியப் பாத்தனான். அப்பாதான் அதை எனக்குக் காட்டினவர். அதைத்தொட்டோண்ண பக்கெண்டு சுருங்கினது அப்ப எனக்குப் பெரும் அதிசயமாயிருந்திச்சுது. இப்பவும் நான் சந்நிதிக்குப் போகேக்குள்ள தூக்கணாங் குருவிக்கூடுகளைத்தான் தேடுவன். எதுவுங் கண்ணில தென்படாது. நுணா மரங்கள் இருந்தாலெல்லோ தூக்கணாங்குருவிக்கூடிருக்கும். இப்ப மருந்துக்குக்கூட அந்த றோட்டில ஒரு நுணாமரமில்லை. ம்.....சரி நான் இப்ப விசயத்துக்கு வாறன்.

17

அம்மாவும் துரைமாமாவும் சந்நதி கோயிலுக்கு வெளிக்கிட்டுக் கொஞ்சத்தூரம் போயிருக்க மாட்டினம்,மழை கொட்டத் துவங்கியிட்டுது. அதையுஞ் சமாளிச்சுப் போய்க்கொண்டிருந்தினம். பட்டகாலிலே படும் எண்டமாதிரித் துரைமாமாவின்ர சைக்கிள் பின்சில்லுக் காத்துப் போட்டுது. பிறகு இரண்டுபேரும் அந்த மழைக்குள்ளை நனைந்து தோய்ஞ்சுதான் கோயிலடிக்குப் போய்ச்சேர்ந்தினம். அப்பவும் மழை விடேல்ல. மழை பெய்யப் பெய்ய அம்மா செல்வச்சந்நிதியானைச் சுத்திக் கும்பிட்டுட்டுச் செய்வினைப் பகுதியைக் கொண்டுபோய்ப் பயந்து பயந்து தொண்டைமானாற்றிலை போட்டுட்டுத் திரும்ப, கையாலை இழுத்துப்பிடிச்ச மாதிரிப் பக்கெண்டு மழை நிண்டுட்டுதாம். இது செய்வினைப் பகுதியின்ர கைங்கரியமெண்டு அம்மா சொன்னா. எனக்கு இப்பவும் அதை நினைச்சால் ஒரு மெய்சிலிர்க்கிற அதிசயமாய்த் தானிருக்குது. அப்ப செல்வச்சந்நிதியானிட்டப் போறதே ஓர் ஆபத்தான காரியம். அங்கை போனாலும் தொண்டைமானாற்றங்கரைப்பக்கம் போறது இன்னும் ஆபத்து. ஏனெண்டால் பலாலி இராணுவமுகாமிலயிருந்து அப்ப ஆமிக்காரன் அடிக்கடி செல்லடிப்பான். அது அச்சொட்டா தொண்டைமானாற்றங்கரைப் பக்கந்தான் வந்துவிழும். அதுக்குள்ளை அகப்பட்டுக் கனபேர் செத்திருக்கினம். அதால அம்மாவந்து மழைக்கதையச் சொல்லேக்குள்ள முதல்ல நான் நம்பேல்ல.


நல்லவேளை அண்டைக்கு அம்மாவோட நானும் செல்வச்சந்நிதிக்குப் போறதாயிருந்தது. பிறகு எனக்குப் பள்ளிக்கூடமிருக்கெண்டதால நான் போகேல்ல. ஆனால் நான் அண்டைக்குப் பள்ளிக்கூடம் போய்க் ஹர்த்தால் எண்டு திரும்பிவந்திட்டன். பள்ளிக்கூடம் அண்டைக்கு நடக்காதெண்டது எனக்கு அங்கை போனாப்போலதான் தெரியும். முன்னமே தெரிஞ்சிருந்தால் அம்மாவோட செல்வச்சந்நிதிக்குப் போயிருக்கலாமெண்டு சரியான கவலையாயிருந்திச்சுது. ஆனால் அம்மா வந்து சொன்ன மழைக்கதையைக் கேட்டாப்போலை அந்தக்கவலை தீர்ந்திட்டுது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ்.அபிசயா
தரம் - 11A
யா/ இணுவில் மத்திய கல்லூரி.



எஸ்.ஸ்ரீஸ்பவன்
தரம் - 1
யாழ்ப்பாணக் கல்லூரி.

மாணவர்களே!


நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



ச.சந்தோஷி
தரம்-8D
யா/சாவகச்சேரி இந் கல்லூரி



ஜனுசன்
தரம் - 8



ஆத்யா செல்வகணேஷ்
தரம் 1C
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

# கிளீன்...

*(முதலாம் பக்கத் தொடர் சி)*

தாக உலகத்தின் கவனத்தை ஈர்க்கத்த கதாக கொதிநிலையில் வைத்திருக்கத் தமிழ் மக்களால் முடியவில்லை.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில்.கடந்த புதன்கிழமை தையிட்டியில் நடந்த போராட்டம் ஒப்பீட்டளவில் எழுச்சிகரமானது.தையிட்டியை மையமாகக் கொண்டு இப்பொழுது தமிழ் அரசியல் நொதிக்கத் தொடங்கியுள்ளது. சிறீலங்காவை கிளீன் செய்யப் போவதாகச் செல்லும் ஓர் அரசாங்கத்தை நோக்கி "கிளீன் தையிட்டி" என்று தமிழ்மக்கள் கேட்கிறார்கள்.

நில ஆக்கிரமிப்புக்கு எதிரான அரசியல் தொடர்ந்து நொதிக்குமா? கொழும்பின் கவனத்தையும் உலகத்தின் கவனத்தையும் தன்னைநோக்கி ஈர்த்துவைத்திருக்க முடியுமா?

முடியுமா என்ற கேள்விக்கே இங்கு இடம் இல்லை. அதை எப்படியாவது செய்துமுடிக்கவேண்டும்.நில ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் தீர்க்கப்படாத ஏனைய பிரச்சினைகளுக்கு எதிராகவும் தமிழ்மக்கள் தமது அரசியலில் நொதிக்கச் செய்யவேண்டும்.உலகமும் கொழும்பும் திரும்பிப்பார்க்கத்தக்க எழுச்சிகளை ஒழுங்கமைக்கவேண்டும்.

தையிடியில் புதன்கிழமை திரண்ட மக்கள் ஒரு கட்சியின் ஆதரவாளர்கள் மட்டுமல்ல.அதில் முன்பு அரசாங்கத்தின் பக்கம் நின்ற கட்சிகள்,நிலைமாறு கால நீதியை ஆதரித்த கட்சிகள் என்று எல்லா வகைப்பட்ட கட்சிகளும் நின்றன.அது ஒரு திரட்சி. வரலாற்றில் எல்லாத் தேசத் திரட்சிகளும் அப்படிப்பட்டவைதான்."நீ முன்பு அரசாங்கத்தோடு நின்றாய்", "மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அரசாங்கம் காணியை அபகரித்த பொழுது உடந்தையாக நின்றாய்","நிலைமாறு கால நீதியின் பக்கம் நின்றாய்"... என்றெல்லாம் பழைய தோம்பை இழுத்துக் கொண்டிருந்தால் தேசத்தைத் திரட்ட முடியாது.தேசத் திரட்சிக்குள் எல்லாமும் அடங்கும்.அதற்குத் தலைமை தாங்கும் கட்டமைப்பு உறுதியானதாக கொள்கைப் பிடிப்புள்ளதாக இருந்தால் போதும்.

புதன்கிழமை ஏற்பட்ட திரட்சி எல்லாக் கட்சிகளுக்கும் ஒரு செய்தியை மீண்டும் உணர்த்துகிறது.அது புதிய செய்தி அல்ல. கடந்த 15 ஆண்டுகளாக கற்கத் தவறிய செய்தி.முள்ளிவாய்க்காலில் இருந்து கற்றுக் கொள்ளாத செய்தி.அது ஒரு தேர்தல் தோல்வியிலிருந்துதான் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு செய்தியல்ல.

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்ட எல்லாப் பெரிய எழுச்சிகளும் ஒரு கட்சிக்குரியவை அல்ல.அதில் பல கட்சிகள் இருந்தன.குடிமக்கள் சமூகங்கள்,மக்கள் அமைப்புக்கள் இணைந்தன.எனவே இனிமேலும் அப்படித்தான் இருக்கும். தையிட்டி விவகாரத்தைத் தொடர்ந்து கவனக் குவிப்பில் வைத்திருந்தது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிதான்.சுமார் 20 மாதங்களுக்கு மேலாக அந்தப் போராட்டத்தை மக்கள்மயப்படுத்த அக்கட்சியால் முடியவில்லை.ஆனால் நடந்துமுடிந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் விளைவாக அது சூடுபிடித்திருக்கிறது.விரைவில் நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நோக்கியும் கட்சிகள் உழைக்கின்றன என்பது உண்மை.கட்சிகள் அப்படித்தான் சிந்திக்கும்.ஆனால் யார் எதற்காக உழைக்கிறார்கள் என்பது இங்கு பிரச்சனையில்லை.ஒரு ஆக்கிரமிப்புக்கு எதிராக தேசமாகத் திரள முடிந்தால் அது வெற்றியே.கடந்த 15 ஆண்டுகளில் நிகழ்ந்த "எழுக தமிழ்" "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி" வரையிலுமான எழுச்சி, ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நோக்கிக் குவிந்த வாக்குகள்... எல்லாமும் பல கட்சிகளும் மக்கள் அமைப்புகளும் சேர்ந்து திரட்டியவைதான்.அவை யாவும் கூட்டுச் செயற்பாடுகள்தான். எனவே தையிட்டிப் போராட்டம் தமிழ்க் கட்சிகளுக்கு மீண்டும் மீண்டும் உணர்த்தியிருப்பது அதனைத்தான்.கட்சிகளைக் கடந்து ஒரு திரட்சியை ஏற்படுத்துவது என்றால்,அதற்குப் பல கட்சிகள் சம்பந்தப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட திரட்சிகள்தான் ஒப்பீட்டளவில் ஐ.நா.வையும் உலகத்தையும் கொழும்பையும் தமிழ் மக்களை நோக்கித் திருப்பும். தமிழர்கள் தமது அரசியலை நொதிக்கச் செய்ய வேண்டும்.கொதிக்கச் செய்ய வேண்டும். கொந்தளிக்கச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தேசத் திரட்சியைப் பலப்படுத்தலாம்.தமிழ்த்தேசிய வாக்குகள் தமிழ்த்தேசியப் பரப்புக்கு வெளியே சிந்தப்படுவதையும் தடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பவோ முடிந்த காரியம்!



இளங்கோ ஏரம்பமூர்த்தி
(சித்த ஆயுள்வேத
இயற்கை வைத்தியர், சுவிஸ்)

## புங்குடுதீவுக்குப் போய்வந்த கதை



"இல்லை, எண்ணெண்டு தெரியாது நிண்டிட்டுது!" என்றேன். எங்க போறியள் எனக் கேட்க, நான் மீசாலைக்கு என்றேன்.

இவ்வாறு நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் போது தூரத்தில் ஓர் ஓட்டோ வருவது தெரிந்தது.

"கொஞ்சம் பொறுங்கோ !"என்று கூறிவிட்டு அவர் அந்த ஓட்டோவை நிறுத்தினார். அவருக்கு அந்த ஓட்டோக்காரத்தம்பி தெரிந்தவர் போலும். இருவரும் புங்குடுதீவைச் சேர்ந்தவர்கள்தான். முதலில் பைக்கில் வந்தவர் அவசரமாகச் செல்வதால் ஓட்டோக் காரத்தம்பியிடம் எனக்கு உதவிசெய்யுமாறு கூறிவிட்டு என்னிடம் இருந்து விடை பெற்றுச் சென்றுவிட்டார்.

ஓட்டோத்தம்பி இன்னுமொரு பெரியவருடன் பலாலி விமான நிலையத்துக்கு யாரையோ அழைத்துவருவதற்காகச் சென்றுகொண்டிருந்தனர். ஆனால் அதற்குமுன் எனக்கு உதவி செய்ய முன்வந்தனர்.

"இன்னும் ஒரு கொஞ்சத்தூரம்தான் தள்ளிக்கொண்டு வாங்கோ, உதிலை ஒரு எனக்குத் தெரிஞ்சாக்களின்ர வீடு வந்திடும். அங்க சைக்கிளை விட்டுட்டு வேலணைக்கு எங்களோட வாங்கோ, அங்கை ஒரு கராஜ்சுக்குப் போய் ஒரு மெக்கானிக்கையும் கூட்டிக்கொண்டு வந்து ஸ்ராார்ட் பண்ணிக்கொண்டு போகலாம்" என்றார். அதன்படியே அரைக் கிலோமீற்றரில் பாலம் முடிந்துவிட்டது. அவர்களுக்குத் தெரிந்த வீட்டில் பைக்கை வைத்துவிட்டு ஆட்டோவில் அவர்களுடன் வேலணை நோக்கிப் புறப்பட்டேன்.

போகும் வழியில் "எங்க போட்டு வாறியள்? " என்று அந்தத் தம்பி கேட்க, "கண்ணகை அம்மன் கோயிலுக்கு, ஆனால் அம்மாளாச்சிதான் சோதிச்சுப்போட்டா" என்றேன்.

உடனே அந்தத்தம்பி "என்ன ஒரு கொஞ்ச நேரந்தானே உங்களை சோதிச்சவா அம்மாளாச்சி, பிறகு எங்களை அவதானே அனுப்பினவா, தெரியேல்லையா? என்றார் தம்பி.

"அட, ஓமெல்லோ, அவ்வளவு நீர்ப்பற்றாக்குறை உடலில் இருந்தபோதும் இரு கண்ணீர்த்துளிகள் கண்களில் இருந்து கசிந்தன.

ஓர் ஓட்டோத்தம்பியிடம் இருந்து இந்தவசனம் ... ! அவர் ஒரு தேவதூதனாக எனக்குத் தெரிந்தார்.

அவரின் பெயர் நாதன், புங்குடுதீவு ..என் புங்குடுதீவு நண்பர்கள் ஊருக்கு போனால் அந்தத்தம்பிக்கு இன்னுமொருமுறை எனக்காக நன்றி கூறிவிடுங்கள். ஓட்டோ தேவையாயின் அவரையே கூப்பிடுங்கள்.

முதலில் உதவிசெய்தவர்களின் பெயரைக் கேட்க மறந்துவிட்டேன். அதனால் முதலிலேயே நாதன் தம்பியின் பெயரைக் கேட்டு அறிந்துகொண்டேன். இடையில் பைக்கில் வந்தவர் பெயர் சூரி என்றும் அவர் கந்தர்மடத்தில் ஒருகோவிலில் தர்ம கர்த்தா என்றும் சொன்னார். இவ்வாறு பல விடயங்களும் பேசிக்கொண்டே வேலணை வந்து சேர்ந்துவிட்டோம் .

அவர் கராஜ் ஒன்றுக்குப் போய் ஒரு மெக்கானிக்கை கூட்டிப் போய் திருத்தலாம், என்று ஆலோசனை சொன்னார். நான் யோசித்துப் பார்த்தேன். திரும்ப ஸ்ராார்ட் பண்ணி திரும்ப இடை வழியில் நின்றால்....! அம்மாடி....! என்னால் இனி முடியாது.

வாகனம் ஏதும் வாடகைக்கு அமர்த்தி பைக்கை ஏற்றி யாழ்ப்பாணம் கொண்டு போய் அங்குள்ள ஆஸ்தான மெக்கானிக்கிடம் கொண்டுபோய்ச்சேர்த்தால் போதும் என்றாகிவிட்டது.

நாதனுக்கும் அந்த யோசனை சரியாகப்படவே அவரே எனக்காக இரண்டு மூன்று கடைகளுக்குச் சென்று அவர்களுடன் பேரம் பேசி, ஒரு வாகனத்தை ஒழுங்கு செய்துகொண்டிருந்தபோது, நான் தாக சாந்தி செய்துகொண்டேன்.

திரும்பி நாதனின் ஓட்டோவுக்கு வந்துகொண்டிருந்தபோது இடையில் பைக்கில் வந்து நாதனை ஒழுங்கு செய்துதந்த சூரி என்ற கோவில் தர்மகர்த்தாவை தற்செயலாக மீண்டும் வேலணையில் சந்தித்தேன். அவரும் மகிழ்ச்சியடைந்தார்.

"es gibt keinen Zufall" என்று ஜேர்மன் மொழியில் சுவிஸ் நாட்டில் சொல்வார்கள். தற்செயல் என்று எதுவுமேயில்லை என்பது பொருள். எமது யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் சொன்ன விடயம்தான்.

"எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்!"

சூரி ஐயாவுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறிவிட்டு "நீங்களும் கோயில் ஒண்டு வைச்சிருக்கிறியளாம்!"என்றேன்.

ஓமோம் கந்தர் மடத்திலை என்றார்.

"என்ர மாமிக்கு தொண்ணூறு வயது, ஆனால் தனிய எங்கட ஊரிலையிருந்து கந்தர்மடத்திலை ஒரு கோயிலுக்கு வாறவ, எங்கையெண்டு தெரியாது" என்றேன். "ஆர் முரசுமோட்டையிலையிருந்து வாற வள்ளிப்பிள்ளை ஆச்சியோ?" என்றார்.

நான் அதிர்ந்தேன். "ஓமோம் அவதான்!" அட, மாமி சூரி ஐயாவின் கோவிலுக்கா வாறவா? அவர் மகிழ்ந்தார்.

அட, உண்மையிலேயே தற்செயல் என்று எதுவுமே இல்லைத்தானோ, அவரை ஒழுங்குசெய்தது யார்?

அதற்கிடையில் வாகன ஒழுங்கு செய்துவிட்டு அவசரமாக விமான நிலையம் நோக்கி நாதன் விரைந்தார். பணம் வற்புறுத்திக்கொடுத்தபோதும் வாங்க மறுத்தேவிட்டார். மீண்டும் மீண்டும் சூரியிடமும் நாதனிடமும் என் நன்றியைத் தெரிவித்து வாடகை வாகனத்தில் சென்று அங்கு நின்ற தம்பிமார் உதவியுடன் எனது பைக்கை ஏற்றி யாழ். கொண்டுவந்துவிட்டேன்.

அவர் பக்கத்தில் உள்ள தன்னுடைய நண்பர் மெக்கானிக்கிடம் கொண்டுபோய் உடனேயே திருத்தியும் தந்து விட்டார்.


மாலை ஐந்து மணிபோல வீடுவந்து சேர்ந்தேன். வீட்டில் தங்கைமாரிடம் இந்தக் கதைகள் சொன்னால் நல்ல மங்களம் விழும் என்பதால் போன வேலை முடிந்திருக்கவில்லை என்று பொய்சொல்லி சமாளித்தேன். அப்பொழுதும் சாப்பிடக் கூட வராமல் அப்பிடி என்னவேலையோ என்று தங்கை கடிந்து கொண்டாள்.

பிறகு நட்சத்திரங்கள் எல்லாம் நல்ல நிலையில் நிற்கும் ஒரு நல்ல சுபயோகவேளை பார்த்து எல்லாக்கதையும் சொன்ன போது எல்லாரும் வாயில் கைவைத்துக்கேட்டுக்கொண்டனர்.

பொதுவாகப் புங்குடுதீவு மக்களின் ஒற்றுமை, விருந்தோம்பல் பண்பு, உதவிசெய்யும் உள்ளம், கலகலப்பாக சகஜமாக உளமாறப் பழகும் தன்மை என்பன பற்றி சுவிஸ் நாட்டில் வசிக்கும் புங்குடுதீவு நண்பர்களிடம் கண்டு வியந்தி ருக்கின்றேன்.

அதை என் இந்தப்பயணம் உறுதிசெய்தது. புங்குடுதீவில் எனக்கு நின்று உதவிய மெக்கானிக் தம்பிக்கும் மற்றைய தம்பிமாருக்கும் மற்றும் ஓட்டோ நாதன், தர்மகர்த்தா சூரி ஐயா , தொடர்ந்து எழுதுமாறு ஊக்குவித்த நண்பர் கருணாமூர்த்தி எல்லோருக்கும் நன்றி.

(முற்றும்)






# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

1958 ஆம் ஆண்டு இலங்கையில் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ பண்டாரநாயக்காவால் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டு தென்னிலங்கையில் வசித்துவந்த தமிழர்களை துவம்சம் செய்த பின்னர் அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிக் காடையர் குழு புறப்பட்டது. 14 லொறிகளில் காடையர்கள் புறப்படும் தகவல் சுந்தரலிங்கத்திற்குக் கிடைத்தது.

சுந்தரலிங்கம் வன்னி வேட்டைக்காரர்களையும் தான் குடியேற்றிய மலையக இளைஞர்களையும் அழைத்தார். மான் வெடி, யானை வெடி என்பன வாங்கிவருமாறு உத்தரவிட்டார். (மான் வெடி, யானை வெடி என்பன பற்றி எனக்கு எதுவும் தெரியாது) அனுமதிப்பத்திரம் பெற்று துப்பாக்கி வைத்திருந்தவர்களின் துப்பாக்கிகளை இரவலாகப் பெற்றுக்கொண்டார். இடியன்களையும் பெற்றுக்கொண்டார்.

18

தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்கள் சிலருக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி வழங்கப்பட்டது. அனைவருக்கும் கண்ணம்மா, சின்னம்மா போன்ற பெண்களின் பெயர்கள் சூட்டப்பட்டன. பயிற்சிபெற்ற இளைஞர்கள் பதவியா, மாமடுவ காடுகளுக்கு அனுப்பப்பட்டனர். பகலில் காடுகளிலும் இரவில் வீடுகளிலும் பயிற்சிபெற்ற இளைஞர்கள் தங்கினர்.

சுந்தரலிங்கம் யாழ்ப்பாணம் கண்டி வீதியில் வேட்டியை மடித்துக்கட்டியவாறு எந்தச் சிங்களவனாவது யாழ்ப்பாணம் போவதானால் எனது பிணத்தின் மேலால்தான் போகவேண்டும் என சூளுரைத்தவாறு நின்றார்.


அநுராதபுரத்திலிருந்து புறப்பட்ட லொறிகள் பதவியாவுக்குள் நுழைந்தபோது பதவியாக் காட்டினுள் மரங்களின் மேல் ஏறி இருந்த சுந்தரலிங்கத்தின் படையின் இடியன்களும் ஷொட் கண்களும் திறந்த லொறிகளில் கூச்சலிட்டுக்கொண்டு வந்தவர்கள் மீது வேட்டுகளைத் தீர்த்தன.

மகே அம்மே, தாத்தே வந்த காடையர் கூட்டம் செய்வதறியாது திக்குத்திசை தெரியாமல் காடுகளுக்குள் சிதறி ஓடியது.

இந்தச் சம்பவத்தில் 12 பேர் கொல்லப்பட்டதாக Emergency 58 நூலில் தார்ஸி வித்தாச்சி பதிவுசெய்துள்ளார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலியாகப்போகும் ஈரான்!


ஆர்.பிரகாஷ்

உக்ரைன் ரஷ்யா இடையிலான மோதல்கள் முடிவுக்கு வருவதற்கு, அத்தனை சாத்தியங்களும் வலுவாக ஏற்பட்டிருக்கின்றன. போர் நிறுத்தத்துக்கு வருமாறும், அணுவாயுதப் பரவல்தடை ஒப்பந்தங்களைக்கூட கைச்சாத்திடத் தான் தயார் என்றும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ரஷ்யாவுக்கு விடுத்திருந்த அழைப்பை புடின் ஏற்றிருக்கின்றார். போர் நிறுத்தம் இப்போது வருமோ? எப்போது வருமோ? என்றெண்ணிக்கொண்டிருந்த உக்ரைன் அதிபர் ஷெலன்ஸ்கிக்கு , இப்போது ட்ரம்புக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் வழங்கிய இந்தப் பதிலே பாதி வெற்றிதான். அடுத்தகட்ட நடவடிக்கைகளின் விளைவாக இன்னும் இரு மாதங்களில் அல்லது அதற்கு முன்னதாக உக்ரைனிலும் ரஷ்யாவிலும் அமைதி ஏற்படுவதற்கான சாத்தியங்கள் வலுவாகியிருக்கின்றன.

ஆனால், உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் ஐரோப்பிய முனையில் செய்துகொள்ளப்படவுள்ள அமைதி உடன்படிக்கை , பலியாகக் கேட்கப்போவது மத்திய கிழக்கில் உள்ள ஈரானைத்தான். இன்னும் சொல்லப்போனால், ஈரானை முற்றாகப் பலமிழக்க வைப்பதைப் பிரதான நோக்காகக் கொண்டுதான் ட்ரம்ப் செயற்பட்டுவருகின்றாரா என்ற சந்தேகம் வலுவாக ஏற்பட்டுள்ளது. ஏனெனில், ட்ரம்ப் அமைதியை ஏற்படுத்த விளைவது ரஷ்யாவுடன் மட்டுமல்ல. ரஷ்யாவுடன் இணைந்தும் பிணைந்தும் உள்ள போர்க் கூட்டணியுடன். இங்கு ஆழ்ந்து கவனிக்க வேண்டிய விடயம் இதுதான். வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தேசப்பற்று மிக்கவர். புத்திசாலி என்று புகழ்ந்துள்ள ட்ரம்ப், அவருடன் விரைவில் சந்திப்பை நடத்தவுள்ளதாகவும் அறிவித்துள்ளார். அத்துடன், சீனாவுக்கு எதிராகக் கூடுதல் வரிகள் விதிக்கப்படும் சாத்தியம் இப்போதில்லை. சீனம் அமெரிக்காவின் ஊழைப்பைச் சுரண்டவில்லை என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார். ஆக, இவை அனைத்தையும் ஒரு நேர்கோட்டில் வைத்துப்பார்த்தால் ரஷ்யா ஈரான் வடகொரியா மற்றும் சீனா என்ற போர்க்கூட்டணியை பிரித்தாளும் 'அமெரிக்கத் தந்திரத்தின்படி' ட்ரம்ப் காய்களை நகர்த்துகின்றமை தெளிவாகும்.

ட்ரம்பின் நேசக்கரத்தில் இருந்து இப்போது தனித்து விடப்பட்டிருப்பது ஈரான் தான். இஸ்ரேலை அளவுகடந்து நேசிக்கும் ட்ரம்ப், இஸ்ரேலின் இருப்பை மத்திய கிழக்கில் கேள்விக்கு உட்படுத்தும் ஈரானை அடியுடன் அழித்தொழிக்க வேண்டும் என்பதில் தீராத மோகம் உடையவர். அண்மையில் இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் நேரடி மோதல்கள் ஏற்பட்டபோது, ஈரான் மீது அணுவாயுதத் தாக்குதல் நடத்துமாறு அவர் இஸ்ரேலைத் தூண்டினார். இத்தனைக்கும் ட்ரம்ப் அமெரிக்க அதிபர் தேர்தலின் வேட்பாளராக இருந்தார். எனவே, ட்ரம்பின் ஒவ்வொரு நகர்வும் உலக அமைதிக்காக அல்லாமல், ஈரானை அழிப்பதை நோக்காகக் கொண்டதா? என்ற நியாயமான சந்தேகங்கள் எழவே செய்கின்றன.

கடந்த ஆட்சிக்காலத்தில் சுலைமானியைக் கொன்று, ஈரானியர்களின் தீராக் கோபத்துக்கு ஆளாகிய ட்ரம்ப், தற்போது விட்ட இடத்தில் இருந்து ஆரம்பிக்க எத்தனிப்பதாகவே தெரிகின்றது. ஈரான் அணுவாயுதப் பலமுள்ள நாடு. அணுவாயுதங்களைத் தடுக்கும் சக்தி இஸ்ரேலிய அயன்டோம்களுக்கு இல்லை. ஆதலால், ட்ரம்பின் முயற்சி உண்மையிலேயே உலக அமைதிக்காகவா? அல்லது இஸ்ரேலைக் காக்கவா? என்பது புரியாத புதிரே.





மயூ

# கொமாண்டோக்கள் விஜய்க்கு தேவையா?


தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜய்க்கு "வை" பிரிவுப் பாதுகாப்பு வழங்க இந்திய மத்திய உள்துறை அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது. இனிமேல் 8 முதல் 11 பேர் கொண்ட துப்பாக்கி ஏந்திய இந்திய மத்திய ரிசேர்வ் படையைச் சேர்ந்த கொமாண்டோக்கள் சுழற்சி முறையில் விஜயின் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

முன்னணித் திரைப்பட நடிகர் விஜய், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்திருந்தார். கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் தமிழக வெற்றிக்கழகத்தின் முதலாவது மாநில மாநாடு விழுப்புரம், விக்கிரவாண்டியில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் நடிகர் விஜய் தமிழகத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் மாநில மாநாட்டில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டிருந்தனர். ஆனால் தற்போது நடிகர் விஜய் அரசியல் ரீதியான விமர்சனங்களைச் சந்திக்க ஆரம்பித்திருக்கின்றார். தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை வெள்ள நிவாரணம் பெறுவதற்கு பனையூருக்கு அழைக்கப்பட்ட சம்பவம், மக்கள் சந்திப்புக்களையும் ஊடக சந்திப்புக்களையும் தவிர்ப்பது என்பன அவர் மீதான விமர்சனங்களுக்கு முக்கியமான காரணங்களாகியிருக்கின்றன. அதேநேரம் தமிழகத்தின் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தை விமர்சிக்கும் அளவுக்கு, இந்திய மத்திய அரசை அவர் விமர்சிக்காது மௌனமாக இருப்பதும் அவர் மீதான விமர்சனங்களை அதிகரித்திருக்கின்றது. இந்தப் பின்னணியில் இந்தியாவின் பிரபல்யமிக்க தேர்தல் வியூக வகுப்பாளரான பிரசாந்த் கிஷோரை அண்மையில் சந்தித்திருக்கின்றார் அவர். விமர்சனங்கள் தீவிரமாவதற்கு முன்னரே அவற்றைத் தணிப்பதற்கான முயற்சிகளில் தற்போது இறங்கியுள்ளார் நடிகர் விஜய். அதற்கான முன்னேற்பாடாவே இந்திய மத்திய உள்துறை அமைச்சிடம் பாதுகாப்பைக் கேட்டுப்பெற்றிருக்கின்றார் விஜய். எதிர்வரும் ஏப்ரல், மே மாதங்களில் அவர் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கின்றார். சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள விஜய், 10 கொமாண்டோக்கள் புடைசூழ மக்களைச் சந்திக்கவிருக்கின்றார். இதுவும் வரும் நாள்களில் பேசுபொருளாக நிச்சயம் மாற்றமடையும்.

மக்களைச் சந்திக்காது அறைக்குள் இருந்து அரசியல் செய்ய முயலும் விஜய் அரசியல் செயற்பாடுகளை மக்கள் எவ்வாறு எடுத்துக்கொள்வார்கள் என்பதையும், விமர்சனங்களைத் தணிப்பதற்காக ஏற்பாடு செய்யப்படும் சுற்றுப்பயணங்கள் பயனளிக்குமா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். மேட்டுக்குடி அரசியல் பாங்கைக் கைவிட்டு சாதாரண மக்கள் மட்டத்துக்கு கீழிறங்கி அரசியல் செயற்பாட்டை முன்னெடுக்காவிட்டால், எதிர்பார்த்த அறுவடையை விஜய் பெறுவது சற்றுக் கடினமாகத் தான் இருக்கப்போகின்றது.

மக்களைச் சந்திக்காது அறைக்குள் இருந்து அரசியல் செய்ய முயலும் விஜய் அரசியல் செயற்பாடுகளை மக்கள் எவ்வாறு எடுத்துக்கொள்வார்கள் என்பதையும், விமர்சனங்களைத் தணிப்பதற்காக ஏற்பாடு செய்யப்படும் சுற்றுப்பயணங்கள் பயனளிக்குமா என்பதையும் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
16 பெப்ரவரி 2025

# ஊடகவியலாளர்களை குறிவைத்து வேட்டை

## யசிதரன், வளர்மதி கைது

○ கே.வி.தவராசா



ஈகுவாலிட்டி கிராபிக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரும் நன்கு அறியப்பட்ட பத்திரிகை வெளியீட்டாளருமான வடிவேலு யசிகரனும் சக்தித் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளரான அவரது மனைவி வளர்மதியும் 2008.06.03 ஆம் திகதி அன்று கொட்டாஞ்சேனையிலுள்ள ஜெம்பட்டா வீதியிலுள்ள அச்சகத்திலிருக்கும்போது பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் காலை 10 மணியளவில் கைதுசெய்யப்பட்டனர். அவர்களது கணினி மற்றும் அச்சக இயந்திரங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

### து.ஞ. திசநாயகம் கைது

அதைத் தொடர்ந்து பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸரினால் கைதுசெய்யப்பட்ட யசிகரனையும் வளர்மதியையும் பார்வையிடச் சென்ற "சண்டே ரைம்ஸ்" பத்திரிகையின் கட்டுரையாளரும் அவுட்ரீச் இணையத்தளம் "நோர்த் ஈஸ்டேர்ன்" மாதாந்த பத்திரிகையின் ஆசிரியருமான ஊடகவியலாளர் திசநாயகம் 2008.03.07 ஆம் திகதி அன்று பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸ் தலைமையகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். பின்னர் செய்தியாளர் சித்சிரி விஜயதுங்க, படப்பிடிப்பாளர் கயன் வசந்தரங்க, ஒளித் தொகுப்பாளர் உதயம் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டனர்.

"ஈகுவாலிட்டி கிராபிக்ஸ்" என்ற பெயர் கொண்ட அச்சகத்தின் பணிப்பாளர்களில் யசிகரனும் அவரது மனைவி வளர்மதியும், சரிநிகர்ப் பத்திரிகையின் ஆசிரியரான சிவகுமார் மட்டுமே பொலிஸாரால் கைது நடைபெறும் பொழுது இலங்கையில் இருந்தவர்கள். 2008.08.03 ஆம் திகதி அன்று சரிநிகர்ப் பத்திரிகையின் ஆசிரியரும், அச்சகத்தின் ஒரு பணிப்பாளரும், சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளருமான சிவகுமார், சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைவரான சுனந்த தேசப்பிரியவுடன் பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸ் பிரிவுக்குச் சென்றுள்ளார். மற்றைய ஐந்து பத்திரிகைத் துறையை சேர்ந்தவர்களும் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் 15 மணி நேர விசாரணையின் பின்னர் அச்சகத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான சிவகுமார் பொலிஸ் நிலையத்திலிருந்தே விடுதலைசெய்யப்பட்டார்.

### சிறுவர் பராமரிப்பு இல்லங்கள்

2003ஆம் ஆண்டில் மட்டக்களப்பில் பல சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் இருந்தபோதிலும் சில சிறுவர் இல்லங்களின் பராமரிப்பு, பொருளாதார நெருக்கடி காரணமாக மிகவும் கஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. இதில் நான்கு சிறுவர் இல்லங்களான விபுலானந்தா சிறுவர் இல்லம், கதிரொளி சிறுவர் இல்லம், மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், யோகர் சுவாமி சைவமகளிர் இல்லம் என்பனவற்றின் பராமரிப்பு கேள்விக்குட்பட்டிருந்தது. யசிகரன் "உதவி" என்ற இணையத்தளத்தினூடாக இந்த சிறுவர் இல்லங்களின் நிலையை உலகிலுள்ள பல அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு அறியத்தந்ததையடுத்து, ஜேர்மனியைத் தளமாகக் கொண்டியங்கிய 'Kriegswai Senhilfe Sri Lanka eV' என்ற அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கை வந்து மட்டக்களப்புக்குச் சென்று சிறுவர் இல்லங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். "உதவி" அரசியல், மதசார்பற்ற ஒரு ஊடகக் கூட்டுவேலையாக இயங்கியது. இந்தக் கூட்டு வேலைத்திட்டத்தின் உதவியாளராக மட்டுமே யசிகரன் இயங்கினார்.




200க்கும் மேற்பட்ட அநாதைகள், சிறுவர் இல்லங்களுக்கான நிதி சேகரிப்பு Kriegswai senhite -SriLanka e.V ஜேர்மன் நாட்டில் அரசாங்கத்தினால் வரி விலக்களிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இலங்கை அரசாங்கத்தாலும் உறுதிப்படுத்தப்பட்டு இலங்கை அரசாங்க அதிகாரிகளாலேயே சிறுவர் இல்லங்களின் கணக்கு அறிக்கைகள் வருடா வருடம் ஜேர்மனியில் இயங்கும் தலைமையகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. புலிகள் இயக்கத்தினர் திருகோணமலை வீதி மட்டக்களப்பில் யசிதரனினால் நடத்தப்பட்டுவந்த "தமிழிச்சி" அச்சகத்தின் பொருள்களை எடுத்துச்சென்ற பிறகு யசிகரன் கொழும்பு வந்து கொட்டாஞ்சேனை, ஜெம்பட்டா வீதியில்'Ekwality Graphics Pvt' என்ற பெயரில் அச்சகத்தை நடத்தி வந்தார். இந்த அச்சகத்திலேயே பத்திரிகையாளர் து.ஞ.திசநாயகத்தை ஆசிரியராகக் கொண்ட 'North East u;erald' என்ற பத்திரிகையும், சிவகுமாரை ஆசிரியராகக் கொண்ட "சரிநிகர்" என்ற பத்திரிகையும் அச்சிட்டுவெளியிடப்பட்டுவந்தன. வளர்மதி பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் சக்தித் தொலைக்காட்சியில் கடமைக்கு வரமுடியாத சூழ்நிலையை சக்தி நிர்வாகத்திற்கு அறிவித்திருந்த போதிலும் 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி சக்தித் தொலைக்காட்சி நிறுவனம் வளர்மதியை வேலையிலிருந்து இடைநிறுத்தியது. 06.03.2008, 07.03.2008 ஆகிய தினங்களில் கைதாகித் தடுப்புக் காவலிலிருந்த ஊடகவியலாளர்களான யசிகரன், வளர்மதி, திசநாயகம் ஆகியோரின் கைதுகளுக்கு எதிராக பத்திரிகை உலகம் தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

### எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு கண்டனம்

உள்நாட்டு ஊடகங்கள் மட்டுமன்றி பரிஸை தளமாகக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு விடுத்த அறிக்கையில் கைதுசெய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நிலைகுறித்து ஆழ்ந்த கவலையடைந்ததுடன் இவர்கள் ஏன் தடுத்துவைக்கப் பட்டிருக்கின்றார்கள் என்பதற்கான காரணத்தை இலங்கை அரசு தெளிவுபடுத்தவேண்டும் எனக் கேட்டுக் கொண் டது. விடுதலைப்புலி களிடமிருந்து ஊடகவியலாளர்கள் பணம் பெற்றனர் எனப் பயங்கரவாதத்தடுப்புப்பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர் எனக் கூறப்பட்டது. எனினும் இது குறித்த விசாரணையை தாம் மேற்கொண்ட பொழுது குறிப்பிட்ட நிதி ஜேர்மனியை தலைமையகமாக கொண்டு இயங்கும் அரசசார்பற்ற மன்றமொன்றிடம் இருந்தும், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடமிருந்தும் அவர்களுக்குக் கிடைத்துள்ளது என்பதை உறுதிசெய்யமுடிந்தது என ஊடக சுதந்திர அமைப்புத் தெரிவித்திருந்தது. மேலும் Facilitating Local Initiatves for Conflict Transformation (FLICT) இணையத்தளத்தின் எழுத்தாளர் mTl;uPr; www.outreachsl.com எனும் இணையத்தளத்துக்காகவும் உதவியற்ற தமிழ் மாணவர்களுக்கு உதவுவதற்காகவுமே வடிவேலு யசிகரனும், ஜே. எஸ். திசநாயகம் என்ற பத்திரிகையாளரும் நிதியை வெளிநாட்டிலிருந்து பெற்றனர். மேலும் கிழக்கு மாகாண மாணவர்களுக்கு உதவ ஜேர்மனியிலுள்ள தமிழர்களிடமிருந்து யசிகரன் நிதியுதவி பெற்றமையும் உறுதியாகியிருந்ததது.

---

# காண்பரிய வித்தகர் குழந்தை ம.சண்முகலிங்கம்

## யாரொடுநோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்...

குருவே சரணம்,
சிந்திப்பவர் தம் சிந்தைக்கு
காட்டாதன எல்லாம் காட்டி
எந்தையும் தாயும் ஆன
அம்மையே அப்பா...

நீங்கள் எம்
அருமை நண்பன்
வையத்துள் தெய்வம் உம்
உறவுகள்
எங்கள் தவப்பயன் உங்கள்
ஈடில்லா வாழ்வு
பறத்தல் மறந்த பறவைகள் எமக்கு
மானுடம் வெல்லும் வரை
உள்நின்று ஒளிரும் சக்தி...

எங்கள் காவல் நீங்கள்
புழுவாய் மரமாகி...
திக்குவிஜயம் கொண்டீர்கள்
எமக்குப்
புகலிடம் பிறிதொன்றில்லை...
நாம் போம் வழி...?!??...

நீங்கள்
புனித ஒளி
சித்தம் அழகியார்
அலகில் சோதி
பிறைதழுவிய பௌர்ணமி
நேயத்தே நின்ற நிமலம்
அளப்பருங்கருணை...

எம் நேரகாலம்...
சகுனம் சரியாயில்லை..
நாட்டுப் பரியாரி நல்ல கதை
சொல்லவில்லை...
அந்திமாலைப் பாடல் ஒன்று...
தான் விரும்பாத் தியாகி ஒருவர்...
பொய்கெட்டு மெய்யானார்.
நிகழ்ந்து
நெடும் பயணம்...

அதில்
வார்த்தைகள் அற்ற நடிப்பு
அதுவும்
நீ செய்த நாடகமே...

எனினும்
ஒளிவளர் விளக்கே
எரிகின்ற தேசம் தனில்
இப்போதைக்கேது வழி...
நெஞ்சு பொறுக்குதில்லையே...
அன்னையிட்ட தீ
வேள்வித் தீ ஆக
மண்சுமந்த மேனியரின்
மனத்தவம்
சத்தியசோதனையாய்...
ஆரொடு நோகேன்
யார்க்கெடுத்துரைப்பேன்...

எனக்குத்தெரியும்
தந்தையே நீங்கள்
குழந்தை பாவனை செய்யும்
நல்ல மேய்ப்பர்,
நாளை மறுதினம்
இடுக்கண் வருங்கால்
நாம் நரகத்தில் இடர்படோம்...
எம் மனத்தின் நம்பிக்கையாய்
நீர் துள்ளி எழுந்திடுவீர்...

இன்று ஞானக்கனி உமக்கு
மண்சுமந்தமேனியராய்
அன்பமூதூறும் அயலார் எம்
புஷ்பாஞ்சலி...
சிவப்பு விளக்கில்
துயரத்தின் பறவைகள்
வெவ்வேறு வழிகளில்
அமைதிதேடி படையல் பானம்
ஏந்திச் செல்வோராய் அந்திமாலை
முதல் புலர் காலைவரை
உருப்பளிங்கினில் நெருப்புக்கள்
தோன்றப் பாடின
தந்தது உன் தன்னை
கொண்டது என் தன்னை
சங்கரா
ஆர்கொலோ சதுரர்...?!!!

**நா.நவராஜ்**

இவ்வஞ்சலிக் கவிதை குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 61 நாடகங்களின் பெயர்களை உள்ளடக்கிப் படைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org